இலவச பிரதி

Registered as a newspaper

விலை - ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்- 24

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி - 15 | 01-11-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை 257




## தேசியத்தலைவரின் ஆளுமையை வெளிப்படுத்தும் "விடுதலைப்பேரொளி" கனடாவில் அறிமுகம்

(ரொரன்ரோ)

தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் பன்முக ஆளுமைச் சிறப்புக்களைத் தாங்கி வெளிவந்துள்ள விடுதலைப் பேரொளி நூலின் அறிமுகவிழா நேற்றுமுன்தினம் கனடாவில் சிறப்புற நடைபெற்றுள்ளது. இந்நூல் அறிமுக விழாவில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். மண்டபத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதனைபடுத்து இடநெருக்கடியைத் தவிர்க்கும் நோக்குடன் விழா ஏற்பாட்டாளர்களால் இம்மண்டபத்துடன் இணைந்திருந்த மற்றைய மண்டபத்திற்குள் மக்கள் அனுமதிக்கப்பட்டு அகன்ற திரையில் நிகழ்வுகள் நேரடியாக காண்பிக்கப்பட்டன.

ஈழமுரசின் ஏற்பாட்டில் கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வின் முதல் நிகழ்வாக மங்கலவிளக்கினை தேசியத்தலைவரின் சகோதரி திருமதி.வினோதினி இராஜேந்திரம் ஏற்றினார். தொடர்ந்து கனேடியத்தேசியக் கொடியினை முன்னைநாள் தீவுப்பகுதி கல்வி வலய அதிபரும் கப்டன் வானதியின் தந்தையாருமான

(02ஆம் பக்கம் பார்க்க)



(படம் எழிலன்)

# பொலிசாரின் ட்ரக் வண்டி மீது கந்தர்மடத்தில் கைக்குண்டு வீச்சு!

## பொலிசார் ஒருவர் பலி;மூவர் படுகாயம் படையினரின் தாக்குதலை அடுத்து பதற்றம்

(யாழ்ப்பாணம்)

*யாழ். கந்தர்மடம் பகுதியில் நேற்றிரவு பொலிசாரின் ட்ரக்வண்டி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பொலிசார் ஒருவர் பலியானார்; மூவர் காயமடைந்தனர். இத்தாக்குதலையடுத்து அப்பகுதியில் படையினரும் பொலிசாரும் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.*

யாழ். மாநாகர சபை எல்லைக்குட்பட்ட பலாலி வீதியில் கந்தர்மடம் சந்திக்கும் இலுப்பையடிச்சந்திக்குமிடையில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் அவ் வாகனத்தின் சாரதியான பொலிசார் உயிரிழந்துள்ளார். மேலும் மூன்று பொலிசார் காயமடைந்துள்ளனர்.

இரவு ஏழு மணியளவில் பலாலி வீதியூடாகச் சென்று கொண்டிருந்த பொலிஸ் வாகனமொன்றின் மீதே கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த பொலிசார் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் அடாவடியைக் கண்டித்து யாழ். இல் கண்காணிப்பு அலுவலகம் முன் மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இல் படையினரின் அத்துமீறலைக் கண்டித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று மக்கள் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 1.30 மணிவரை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈழவேந்தன், சிவனேசன் உட்பட மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.கடந்த வெள்ளியன்று அதிகாலை வேளை

(02ஆம் பக்கம் பார்க்க)



(படம்- அஜன்சிலின்)

- மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு -

## 1000இற்கு மேற்பட்டோர் தலையாட்டி முன் நிறுத்தம்

மட்டக்களப்பில் நேற்று அதிகாலை சுற்றிவளைப்பை மேற்கொண்ட படையினர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளை மைதானம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று தலையாட்டிகளின் முன்நிறுத்தியுள்ளனர்.

அதிகாலை நான்கு மணியளவில் மாமாங்கம், ஜெயந்திபுரம், இருதயபுரம், ஊறணி போன்ற சன நடமாட்டம் மிக்க பகுதிகளில் தேடுதலில் ஈடுபட்ட 500இற்கு மேற்பட்ட படையினருடன் முக மூடியணிந்த ஒட்டுப்படையினரும் காணப்பட்டனர்.இவர்கள் 1000இற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளை மைதானம் ஒன்றுக்கு அழைத்துச்

(02ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தம் ஏற்பட்டதால் படையினர் இழப்பு தடுக்கப்பட்டது!

### - சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

குறைபாடுகள் இருந்தாலும் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டமையினாலேயே இராணுவத்தினரின் உயிரிழப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளதென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

விபிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சனாதிபதி இவ்வாறு கூறினார்.

போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட மூன்றரை வருடங்களாக குறைபாடுகளுடனேயும் போர் நிறுத்தங்கள் ஏற்பட்டமையால் படையினர் உயிருடன் இருக்கின்றார்கள். அதிகாரிகளும் உள்ளனர். இதுவரை யுத்தமொன்று இடம்பெறவில்லை. யுத்தமில்லாமையினால் பிரேதப் பெட்டிகள் தற்போது கிராமங்களுக்கு வருவதில்லை. குண்டுகளும் வெடிப்பதில்லை என அவர் மேலும் கூறினார்.

## மட்டு. கிரானில் இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி கிரானில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர். சுட்டுக் கொல்லப்பட்டவர் கிரானைச் சேர்ந்த 19 வயதான நந்தசாமி சசிகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (32)



எமது தீபாவளி வாழ்த்துக்கள் !

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களுக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.



# சிறிலங்காவில் நீதியான தேர்தல் நடைபெறுமா?

# அமெரிக்கா கவலை கொண்டுள்ளது

## —அமெ. முன்னாள் பாதுகாப்பு செயலர் ஆர்மிரேஜ்

(கொழும்பு)

சிறிலங்காவில் சனாதிபதித் தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும் நடைபெறுமா என்று அமெரிக்கா கவலை கொள்வதாக அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைமைகள் குறித்து ஊடகம் ஒன்றுக்கு ரிச்சர்ட் ஆர்மிரேஜ் அளித்த நேர்காணலில் தெரிவித்தாவது;

எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அமெரிக்கா மற்றும் சர்வதேச சமூகத்தின் கவலையெல்லாம் சிறிலங்காவின் சனாதிபதி தேர்தல் நியாயமாகவும், நீதியாகவும் நடைபெறுமா என்பதுதான். சிறிலங்காவின் சனாதிபதியாக யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர்களுடன் அமெரிக்க அரசாங்கம் இணைந்து செயற்படும்.

இனப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் சிறிலங்காவுடன் கூட்டாட்சி முறையிலான அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்கள் வன்முறைகளைக் கைவிட வேண்டும். சிறிலங்கா அரசாங்கத்துடனான அமைதிப் பேச்சுக்களை மீண்டும் விடுதலைப்புலிகள் நடாத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் இணைந்து சுனாமி பொதுக்கட்டமைப்பை உருவாக்க முன்வந்தமை குறிப்பிட்டத் தக்க நிகழ்வு. ஆனால், அந்த வாய்ப்பை சிறிலங்கா அரசாங்கம் தவறவிட்டு விட்டது. அதை செயற்படுத்தியிருந் தால் சிறிலங்கா அரசாங்கத்தின் பாரிய சாதனையாக இருந்திருக்கும்.

எதிர்வரும் அமைதிப் பேச்சுக்களில் முஸ்லிம்களும் பங்கேற்கவுள்ளனர். இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு காணும்போது அனைத்து இனமக்களும் ஏற்றுக்கொள்ளும்படியான இறுதித் தீர்வை இது உறுதிப்படுத்துவதாக அமையும் என்றார் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்.

# யுத்த நிறுத்த உடன்பாட்டை அரசு மீளாய்வு செய்யப்போவதாக எச்சரிக்கை

## —புலனாய்வுத்துறை அதிகாரியின் கொலைக்கும் கண்டனம்

சிறிலங்கா இராணுவ புலனாய்வுத் துறை உயர் அதிகாரி ரிஸ்வி மீடின் படுகொலைக்கு சிறிலங்கா அரசு கண்டனம் தெரிவித்துள்ளதுடன், யுத்த நிறுத்த அமுலாக்கத்தை மீளாய்வு செய்யப் போவதாகாவும் எச்சரித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகளின் படுகொலை வரிசையில் இதுவும் ஒன்று. அரசாங்கம் இந்தப் படுகொலையை வன்மையாகக் கண்டனம் செய்கிறது. இதுவரை 17 புலனாய்வுத்துறை அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இனியும் படுகொலைகள் நடைபெறாமல் தடுக்க யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுலாக்குவது தொடர்பாக உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இச்சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப்புலிகளே காரணம் என்று சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளார். இப்படுகொலை தொடர்பான பல தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

# புலனாய்வுத்துறை அதிகாரியின் கொலைக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கண்டனம்

சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரி ரிஸ்வி மீடின் படுகொலைக்கு இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சிறிலங்கா இராணுவப் புலனாய்வுததுறையின் மூத்த அதிகாரி லெப் கேணல் ரிஸ்வி மீடின் கடந்த சனிக்கிழமை இரவு படுகொலை செய்யப்பட்டுள்ளதை வன்மையாக கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை படுகொலைகளை நிருபிக்க இயலாது அதற்கான செயலாணையும் எங்களுக்கு இல்லை. இதைப் பொலிசார்தான் செய்ய வேண்டும். இவ்வாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகளுள் ஒருவரான ஹெலன் ஒலஸ் கொப்பின் கூறியுள்ளார்.

சுட்டுக்கொலை செய்யப்பட்ட இராணுவ புலனாய்வுத்துறையின் தலைமை அதிகாரியான ரிஸ்வி மீடினின் கொலை தொடர்பாக கேட்டபோதே கொப்பின் இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்:

நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் ஒரு முடிவிற்கு வந்தே ஆக வேண்டும் என்ற நிலைமைக்கு நாங்கள் வந்துவிட்டோம். சனிக்கிழமை நடை பெற்ற கொலை குறித்த விபரங்கள் இன்னமும் எங்களுக்குத் தெரியாது. ஆனால் அது ஒரு அரசியல் ரீதியானபடுகொலையாக இருக்கலாம் என்ற ஊகங்கள் இருக்கின்றன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இது வரை கிட்டத்தட்ட 190 படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன. அரசியல் ரீதியில் நடைபெற்ற படுகொலைகளை மட்டுமே நான் குறிப்பிட்டுள்ளேன் இந்தக் கொலைகளில் பெரும்பாலனவை கிழக்கில் தான் நடைபெற்றிருக்கின்றன. அங்கு ஒரு திரைமறைவு நிழல் யுத்தம் நடைபெறுகின்றது போன்று தோன்றுகின்றது அதில் அனைத்துத் தரப்பினருமே சம்பந்தப்பட்டிருப்பது போன்றே தோன்றுகின்றது.

சனாதிபதித் தேர்தலை நெருங்கி விட்டோம். அந்த வேளையில் நாங்கள் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளோம். வன்முறைச்சம்பவங்கள் ஒத்துக்கொள்ளப்படும் ஒரு நிலைமைக்கு நாம் வந்து விட்டது போல் தெரிவிக்கிறது.

கிழக்கில் நடைபெறும் படுகொலைகள் ஊடகங்களில் பிரதானமாக இடம்பெறுவது அரிதாகி விட்டது. இந்த நிலை போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை படிப்படியாகத் தொலைப்பதுபோலத் தெரிகின்றது. சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் இடையேயான உறவுகளும் மோசமடைந்து வருகின்றன. தத்தம் பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு இருதரப்பினரிடையேதான் இருக்கின்றது. இதற்கு ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றார்.

# விசேட சத்திர சிகிச்சை

அவுஸ்திரேலிய நாட்டில் இருந்து வருகை தந்துள்ள சிறந்த சத்திர சிகிச்சைக் குழுவினரால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நேற்றுமுதல் நோயாளர்களைப் பார்வையிட்டு சத்திரசிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதில் பொதுச் சத்திரசிகிச்சை,பெண்நோயியல் சத்திர சிகிச்சை, என்பு மூட்டுச்சத்திரசிகிச்சை ஆகியன வழங்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக குடலிறக்கம் (கேணியா), உடலில் ஏற்படும் கட்டிகள், மூலவருத்தம், கற்பப்பை இறக்கம், அதிக தீட்டு வெளியேறல், என்பு முறிவுகள் போன்றவற்றிற்கு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 7.11.2005 வரை நடைபெறவுள்ள இச்சேவை வறிய மக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்படுவதால் பயன்பெற விரும்புவோர் இவ் அரிய சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன் படுத்திக் கொள்ளுமாறு மருத்துவமனையின் பணிப்பாளர் அறியத் தந்துள்ளார்.

# இங்.செல்லலாம் அமெ.செல்லலாம் மடுவுக்குச் செல்ல முடியவில்லை

## —பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

இந்தியாவிற்குச் செல்ல முடியும் இங்கிலாந்திற்கு - அமெரிக்காவிற்குச் செல்ல முடியும். ஆனால், எமது நாட்டிற்குள் உள்ள மடுத்தேவாலயத்திற்கு என்னால் செல்ல முடியவில்லையெனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஹெட்டிநுவரவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், போர் நிறுத்த உடன்படிக்கையின் செயற்பாட்டுத் தன்மை குறித்து சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

# கொலையுடன் தொடர்புடையோர் குறித்து விசாரணையின் பின்பே தெரிவிக்கலாம்

## — பிரதி பொலிஸ் மா அதிபர் விஜேதிலக

இராணுவ புலனாய்வு பிரிவு உயரதிகாரி கேணல் ரிஸ்வி மீடின் கொலைச் சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் நடைபெற்று வருவதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அசோக விஜேதிலக தெரிவித்தார்.

இந்தக் கொலைக்கான பின்னணி தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். விசாரணைகளின் பின்னரே கொலையுடன் நேரடியாக தொடர்புடையவர்கள் குறித்து தெரிவிக்க முடியும் எனவும் அவர் கூறினார். துவான் ரிஸ்வி மீடின் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நான்கு பேர் பொலிசாரல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சம்பவதினம் புலனாய்வு அதிகாரி துவான் ரிஸ்வி மீடினுடன் சென்றதாக கூறப்படும் நபர் தலைமறைவாகியுள்ளார். மேலும் ரிஸ்வி மீடின் வாகனத்தின் உள்ளே வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டு இருக்கலாம் என பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இரசாயன பகுப்பாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் இது குறித்து சரியான முடிவுக்கு வரமுடியும் எனப் பிரதி பொலிஸ் மா அதிபர் அசோக்க விஜேதிலக தெரிவித்தார்.(32)

# ஆளில்லா வேவு விமானம் வடமராட்சி, தென்மராட்சியில் வேவு

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் ஆளில்லா வேவு விமானம் நேற்று தனது வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதிகளில் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக இந்த ஆளில்லா வேவு விமானம் வேவுப்பணிகளில் ஈடுபட்டது.

வவுனியா வடக்குப்பகுதியில் ஆளில்லா வேவுவிமானம் ஒன்று அண்மையில் வீழ்ந்து நொருங்கியபோது வழமையான பயிற்சி நடவடிக்கைக்காகவே அனுப்பிவைக்கப்பட்டது என்று சிறிலங்கா இராணுவத்தரப்பு தெரிவித்தது. ஆனால் தமிழீழப்பகுதிகளில் வேவு பார்ப்பது யுத்த நிறுத்த மீறல் என்று போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு கருத்து வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது வடமராட்சி மற்றும் தென்மராட்சிப்பகுதிகளில் தமிழீழப்பகுதிகளிலேயே வேவுவிமானம் தனது வேவுப்பணியை மேற்கொண்டுள்ளது.

### தேசியத்தலைவரின்..

சண்முகநாதப் பிள்ளையும் தமிழீழத் தேசியக் கொடியினை 1993இல் மன்னாரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளி கௌதமியின் தந்தையும் ஈழமுரசுப் பணிமனை அலுவலருமான இளையதம்பி கந்தசாமியும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. நாதஸ்வர இசையினை முருகதாஸ் குழுவினர் வழங்கினர். தொடர்ந் வாசு சின்னராசாவின் மாணவி ரின் வரவேற்பு நடனமும் அதைத் தொடர்ந்து தமிழீழத்தில் இருந்து காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் அவர்களின் சிறப்புரையும் தொடர்ந்து நூல் வெளியீடும் இடம் பெற்றன.

தலைமை உரையை வைத்திய கலாநிதி பிகராடோவும் அறிமுகவுரையை முன்னைநாள் மகாஜனாக் கல்லூரி அதிபர் பொ.கனகசபாபதியும் ஆய்வுரையை ரொரன்ரோ பல்கலைக் கழகம் பேராசிரியர் திருத்தந்தை யோசப் சந்திரகாந்தனும் வெளியீட்டு ரையை எழுத்தாளர் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) நிகழ்த்தினர்.

முதல்பிரதியை பேராசிரியர் திருத்தந்தை யோசப் சந்திரகாந்தன் வழங்க நியூ பைசிலான்ட் உரிமையாளர் சுரேஸ் பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியை பிகராடோ வழங்க பாபு கேற்றறிங் உரிமையாளர் பாபு பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து காட்சியும் கானமும் (தலைவர் வரலாறு) "நாளெல்லாம் நீ பிறந்த நாளே" கவிதையை கவிஞர் சு.விவேகானந் தன் வழங்கினார்.அதையடுத்து தமிழீழத்தில் இருந்து தளபதி விதுசாவின் சிறப்புரையும் எழுச்சி நடனங்களும் நன்றியுரையும். நடைபெற்றன (எ)

### பொலிசாரின்..

இதனிடையே இக்குண்டுத் தாக்குதல்களையடுத்து வீதியால் பயணித்த பொதுமக்கள் மீது படையினரும், பொலிசாரும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.பரவலாக துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. தீபாவளி கொண்டாட்டங்களிற்கான பொருட்களை கொள்வனவு செய்து வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்களே தாக்கப்பட்டுள்ளனர். கந்தர்மடம் சந்தியிலுள்ள கடைகள் உடனடியாக இழுத்து மூடப்பட்டன. (27,28,33)

### 1000இற்கு...

சென்று தலையாட்டிகளின் முன் நிறுததி சுமார் 20 பேரை மேலதிக விசாரணைக்கு அழைத்துச்சென்றனர்.

யுத்தகாலத்தில் இடம்பெற்றது போன்ற இந் நடவடிக்கையால் மட்டக்களப்பில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதி மக்கள் குழப்பமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### படையினரின்..

புத்தூர் கிழக்கில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் அங்கிருந்த பெண் ஒருவருடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றதால் கொதிப்படைந்து இராணுவத்தினர்க்கு எதிரான போராட்டங்களை நடத்திய பொது மக்களை அடக்குவதற்காக இராணுவமும் பொலிசாரும் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் பலியானதுடன் 10 பேர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறான படையினரின் அத்துமீறலையும் அடாவடித்தனங்களையும் கண்டித்தும் படையினரது அராஜகங்களால் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குமாறு கோரியுமே இவ் ஆர்ப்பாட்டம் கண்காணிப்புக்குழுவின் செயலகம் முன்பாக நடத்தப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தின் முடிவில் தமது நிலைப்பாடுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை ஒன்றை கண்காணிப்பு குழுவினருடன் நடத்திய பொது மக்கள் அவர்களிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். மகஜரின பிரதிகள் மனிதஉரிமை ஆணைக்குழு, வடக்கு- கிழக்கு மனித உரிமை செயலகம், பொறுப்பாளர். அரசியல் துறை, தமிழீழம் தமிழீழ விடுதலைப்புலிகள், பொறுப்பாளர், அரசியல்துறை, யாழ் மாவட்டம், தமிழீழ விடுதலைப் புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ். மாவட்டம், சிறிலங்கா இராணுவத்தளபதி யாழ். மாவட்டம் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.இதே வேளை முன்னதாக நல்லூர் கந்தசாமி கோயிலில் திரண்ட மக்கள் அங்கிருந்து ஊர்வலமாக வந்து கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மை குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீனம்–இஸ்ரேல் சண்டை நிறுத்தத்திற்குச் சம்மதம்

(டெல்அவிவ்)

பலஸ்தீனத்தில் உள்ள காஸா புறநகரில் குடியேறி இருந்த அனைத்து இஸ்ரேலியர்களையும், இஸ்ரேல் அரசு ஏற்கனவே வெளியேற்றி விட்ட நிலையில் அதை மனமகிழ்ச்சியுடன் பலஸ்தீனியர்கள் வரவேற்றனர். ஆனால் அவ்வப்போது மீண்டும் மீண்டும் பலஸ்தீன இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேல் படையினருக்கும் இடையே சிறுசிறு மோதல்கள் ஏற்பட்டன. ஏவுகணைகள் வீசப் பட்டன. இந்தநிலையில் அமெரிக்கா இதில் தலையிட்டு இரு தரப்பிலும் சமாதானம் கடைப்பிடிக்க வலியுறுத்தியது. பலஸ்தீன தலைவர் முகமது அப்பாசிடம் அமெரிக்கா விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றார். இஸ் ரேலும் இந்த சமாதான முயற்சிக்கு பச்சைக் கொடி காட்டியது. அதைத் தொடர்ந்து இருதரப்பிலும் சண்டை நிறுத்தம் செய்ய ஒப்புக் கொள்ளப்பட்டது.

# ஈராக்கில் தாக்குதல்கள் காரணமாக ஒரு ஆண்டில் இருபத்தாறாயிரம் பேர் பலி

*பென்டகன் தகவல்*

(வோஷிங்டன்)

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பின் அங்கு தீவிரவாதிகள் தொடர்ந்து அமெரிக்கப் படையினர் மீதும் ஈராக் இராணுவத்தின் மீதும் பொலிசார் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றார்கள்.

அப்பாவிப் பொதுமக்களும், அரசு அதிகாரிகளும் வெளிநாட்டு பயணிகளும் தீவிரவாதிகளின் தற்கொலைப் படைதாக்குதலுக்கும் அமெரிக்க படையின் தாக்குதலுக்கும் பலியாவது அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாகி விட்டது.

கார்க் குண்டு தாக்குதல்களும் அன்றாடம் நடைபெற்று வருகிறது. தீவிரவாதிகள் கடந்த ஒரு ஆண்டில் நடத்திய தாக்குதலில் மட்டும் 26 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். இந்த தகவலை அமெரிக்க இராணுவ அலுவலகமான பென்டகன், வெளியுறவுத்துறை ஆகியவை வெளியிட்டுள்ளன. அமெரிக்க பாராளுமன்றம் இது தொடர்பாக முழு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

# நிவாரணப் பொருட்களை பரிமாற இந்-பாக். எல்லையில் ஐந்து இடங்கள் திறப்பு!


*(இஸ்லாமபாத்)*

***இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இரு நாடுகளின் மக்கள் சந்தித்துக் கொள்ளவும் நிவாரணப் பொருட்களை பரிமாறிக் கொள்ளவும் நவம்பர் ஏழாம் திகதி முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மையங்களை திறந்து விட இரு நாடுகளும் இணங்கியுள்ளன.***

இந்தியா- பாகிஸ்தான் அதிகாரிகளிடையே இஸ்லாமபாத்தில் சனிக்கிழமை அன்று நடந்த பேச்சுவார்த்தைகளின் போது இந்த உடன்பாடு ஏற்பட்டது. இரு நாடுகளின் சார்பில் சனிக்கிழமை நள்ளிரவுக்குப் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனி நள்ளிரவுக்குப் பின், நடந்த பேச்சுவார்த்தையின் பின் பேச்சுவார்த்தை முடிவைத் தெரிவிக்கும் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதன்படி

இரு நாடுகளைச் சேர்ந்த பொது மக்கள் இந்த மையங்களில் கால் நடையாக எல்லையைக் கடக்கலாம். இந்த மையங்களில் முசபராபாத் சிறிநகர் பேருந்து. சேவைக்கான நடைமுறைகள் இந்த ஐந்து இடங்களிலும், பின்பற்றப்படும் பிரிந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எல்லையைக் கடந்து செல்ல முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டிருக்கிறது.



சீனாவில் அன்ஹூய் மாகாணத்தில் ஹெய்பிய் நகரில் உள்ள அன்ஹூய் சர்வதேச தாதியர் பள்ளியில் தாதியர்கள் ஆயிரக்கணக்கானோர் பயிற்சி முடித்து திரும்புகிறார்கள்.



கடந்த மாதம் எட்டாம் திகதி பாகிஸ்தான், காஷ்மீர் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தால் தம் உறவுகளை இழந்த சிறுமிகள் அவர்களுக்காக பிரார்த்தனை செய்கின்றனர்.

# இந்தோனேஷியாவில் மூன்று மாணவிகள் தலை துண்டித்து படுகொலை

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் சுலாவேசி தீவில் உள்ள போசோ பகுதியில் 16 முதல் 19 வயதுக்கு உட்பட்ட கிறிஸ்தவ மாணவிகள் மூன்று பேர் தலை துண்டித்து படுகொலை செய்யப் பட்டுள்ளனர். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; குறிப்பிட்ட மாணவிகள் பாடசாலைக்குச் சென்ற போது கையில் வாள் வைத்திருந்த ஆறு பேர் அவர்களைத்தாக்கி தலையைத் துண்டித்துக் கொன்றனர். இதைத் தொடர்ந்து அங்கு கிறிஸ்தவர்- முஸ்லிம் இடையே மோதல் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது. இதைத்தடுப்பதற்காக அங்கு ஆயிரம் பொலிசார் குவிக்கப்பட்டனர்.

1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை கிறிஸ்தவர்- முஸ்லிம் இடையே ஏற்பட்ட மோதலில் இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டனர். இந்தோனேஷியாவின் மொத்த மக்கள் தொகை 22 கோடி ஆகும். அவர்களில் 85 சதவீதம் பேர் முஸ்லிம்கள். கிழக்குப்பகுதியில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் சரிசமமாக உள்ளனர். இதனால் அங்கு அடிக்கடி மத மோதல்கள் உருவாகி பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

## இங்கிலாந்து இராணுவத்தில் சேர முன்வருவோர் தொகை குறைவு

இங்கிலாந்து நாட்டு இராணுவத்தில் புதிதாக வேலைக்கு சேர யாரும் முன்வரவில்லை. இதனால் இராணுவ வீரர்கள் தங்கள் நண்பர்களை இராணுவத்தில் சேர்த்துவிட்டால் அவர்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசு தருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பரிசுத்திட்டம் கிறிஸ்மஸ் தொடங்கி ஆறு வாரங்கள் அமுலில் இருக்கும்.

ஈராக் போர் தவறு என்ற பிரசாரமும், வேலை இல்லாது இருப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும், பள்ளிக்கூடப் படிப்பு மட்டும் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்திருப்பதும், இராணுவ வேலையை விரும்பாமையும் காரணங்களாகுமெனக் கருதப்படுகிறது.

## ஈராக்கில் குண்டு வெடித்து முப்பது பேர் பலி

(பாக்தாத்)

நேற்று முன்தினம் ஈராக் நாட்டில் பேரீச்சம்பழம் ஏற்றப் பட்ட பாரவூர்தியில் வைக்கப்பட்ட குண்டு வெடித்து 30 பேர் பலியானார்கள். 42 பேர் காயம் அடைந்தனர்.



இந்தச் சம்பவம் ஷியாமுஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் ஹொவைதார் என்ற நகரில் நடந்தது.

அந்த பாரவூர்தியில் பேரீச்சம்பழங்களை வாங்குவதற்கு வாடிக்கையாளர்கள் திரண்டிருந்தபோதே குண்டு வெடித்தது.

இதற்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. சன்னி முஸ்லிம் தீவிரவாதிகள் தான் இதைச் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# ஐவரிக்கோஸ்ட் பிரதமர் பதவி விலக மறுக்கிறார்



எவ்வாறான நெருக்கடியிலும் தான் பதவி விலகப் போவதில்லையென ஐவரிக்கோஸ்ட் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இவரது பதவிக்காலம் நேற்று முன்தினம் முடிவிற்கு வந்துள்ளது. இதனையடுத்து அவரைப்பதவி விலகுமாறு அக் கட்சியினர் நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐவரிக் கோஸ்டின் சனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை தான் பதவியில் இருக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

பதவி விலகுமாறு சனாதிபதியை வலியுறுத்தி இறுதியாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிசார் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக பலர் காயமடைந்ததாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



கடந்த சனிக்கிழமை ஆந்திர மாநிலத்தில் இடம் பெற்ற அனர்த்தத்தில் ஆற்றுக்குள் மூழ்கிய புகையிரதப் பெட்டிகளை மீட்கும் பணியினை பார்வையிடுகிறார் ஆந்திர முதல்வர் ராஜசேகரரெட்டி

# டில்லி குண்டு வெடிப்புப் பற்றி முக்கிய துப்புக் கிடைத்தது

*சிவராஜ் பட்டேல்*

(புதுடில்லி)

டில்லியில் சங்கிலித் தொடர் குண்டு வெடிப்பு நடத்திய தீவிரவாதிகள் பற்றி முக்கிய தகவல் கிடைத்திருப்பதாக இந்திய மத்திய உள்துறை மந்திரி சிவராஜ் பட்டேல் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது: குண்டு வெடிப்பு பற்றிய விசாரணை சரியான திசையில் சென்று கொண்டு இருக்கிறது. விசாரணையில் ஏராளமான தகவல்கள் தெரிய வந்துள்ளன. ஆனால் அவற்றை வெளியிடும் படி எங்களை நிர்ப்பந்தம் செய்யாதீர்கள் இத்தகைய தகவல்களை வெளியிடும் போது அவற்றின் முக்கியத்துவம் குறைந்து விடும்.

விசாரணையின் முடிவு இறுதி செய்யப்பட்டதும் அதுபற்றி விரிவாக கூறுகிறோம். பொலிசார் திறமையாக தகவல்களைத் திரட்டி வருகிறார்கள். எந்த தீவிரவாத இயக்கம் இதில் ஈடுபட்டது என்பதை இப்போது தெரிவிப்பது சரியல்ல பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தான் இப்போது கவனம் செலுத்தி வருகின்றோம் என்றார்.



கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் உட்பட செயலக ஊழியர்கள் கரைச்சிப் பிரதேச கிராம சேவை அலுவலர்கள் நேற்றையதினம் சிரமதானப் பணியில் ஈடுபடுவதனைப் படத்தில் காணலாம்.

(படம்.:- சோதி)

# தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு கிராம அமைப்புக்களுடன் கலந்துரையாடல்

(மல்லாவி)

முல்லைமாவட்ட துணுக்காய் பிரதேசத்தில் எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு கிராம அமைப்புகளுக்கான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி காலை 10 மணியளவில் துணுக்காய் பிரதேச செயலர் கேட்போர் கூடத்தில் துணுக்காய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் நா.சிவா தலைமையில் இடம்பெற்றது.

இதில் மாவீரர் தினத்தை முன்னிட்டு கிராமங்கள் தோறும் சிரமதானங்களை மேற்கொள்ள அமைப்புக்கள் முன்வர வேண்டும் எனவும் அத்துடன் மாவீரர் பெற்றோர்களை பிரதேச ரீதியாக கௌரவித்தல் மாவீரர் விழாக்களை சிறப்பாக நடாத்தல் போன்ற கருத்துக்களை தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.அமிர்த லிங்கம் துணுக்காய் கிராம சேவையாளர், பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில துணுக்காய் கல்விளான், ஆலங்குளம், தேறாங்கண்டல் கிராமங்களின் பொது அமைப்புக்கள் என்பனவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (24)

# இராணுவக் காட்டுமிராண்டித்தனமான செயல்கள் தொடரின் பாரதூரமான விளைவுகள் உருவாகும்

## -துணுக்காய் பிரதேச தே.எ பேரவை எச்சரிக்கை

(மல்லாவி)

"தமிழ்பேசும் மக்களின் தாயக மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வரும் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகள் தொடருமானால் சிங்கள தேசம் எதிர்காலத்தில் பாரதூரமான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும்" இவ்வாறு துணுக்காய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா படையினரின் அண்மைக்கால தமிழர் விரோதப் போக்கு குறித்து வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா அரசால் யுத்த நிறுத்தம் போன்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமுலில் இருக்கும் இவ்வேளை தொடர்ச்சியாக மக்கள் பதற்றத்தோடும் இடம் பெயர்வோடும் வாழும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சிங்கள இனவாதம் தமிழர்களை எதிரிகளாக தங்கள் மனங்களில் பதித்து வளர்த்தெடுக்கப்பட்டது அரசு கூலிப்படைகள் தமிழர் விரோதச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. தமிழ் மக்கள் இன்னும் தங்கள் உணர்வுகளை ஆத்ம ரீதியிலான போராட்டங்கள் சமாதான வழியிலான போராட்டங்களை எழுச்சியுடன் நடாத்திக் கொண்டு இருக்கின்றனர்.

நீதியும், நியாயமும் கிடைக்காத தமிழ் பேசும் மக்களின் கடந்த கால வரலாறு ஆயுதப் போராட்டமாக வலிமை பெற்று தமிழ் மக்களின் சக்தியாக நிற்கின்றது.

இந்நிலையில் சிங்கள அரச படைகளின் மிலேச்சத் தனமான தாக்குதல்கள், கெடுபிடிகள் எம் மக்களை ஆத்திரமூட்டும் அபாய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் புத்தூர் கிழக்கில் அரச இராணுவம் எமது தமிழ் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட வேளையில் அயலவர்களின் உதவியால் அப் பெண் காப்பாற்றப்பட்டார்.

இதனை மக்கள் ஒன்றிணைந்து எதிர்த்தபோது விரட்டிய டிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அப் பகுதி மக்கள் கண்மூடித்தனமாக இராணுவத்தினரால் கீழ்த்தனமான முறையிலும், துப்பாக்கிகளை ஏந்தி சுடுவதில் ஈடுபட்டதன் விளைவாக எம் தர்மராஜா நிரோஜன் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அவ்விடத்திலேயே மரணமானார்.

அத்துடன் பத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்துள்ளனர். மேலும் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். தமிழர்தேசம் எல்லா வழிகளிலும் வளம் பெற்று வருவதை சிங்கள இனவாதம் புரிந்து கொண்டே எமது உணர்வுகளை ஆயுத முனையில் அடக்கி மிரட்ட நினைப்பது எமக்கு மிக வேதனையைத் தருகின்றது. நாம் நீண்ட கால வரலாற்றின் ஊடாகச் சிங்கள இன வாதத்தினால் கடும் மோசமாக ஏமாற்றப் பட்டிருக்கின்றோம்.


இந் நிலையில் மக்களை ஆத்திரமூட்டும் இது போன்ற சம்பவங்கள் தொடருமானால் சிங்கள தேசம் எதிர்காலத்தில் பாரதூரமான பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதனை எச்சரிக்கின்றோம். (24)

## வருடாந்த பரிசளிப்பு

(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி முதல்வர் ரெஜிஸ் தலைமையில் இடம் பெற்றது. விழாவிற்கு பிரதம அதிதியாக மன்னார் நகரப் பிரதேச செயலாளர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

(18)



பலமாத காலமாக கரடிப்போக்கு வி.கே.எம்கட்டடத்திற்கு முன்பாக ஏ-9 வீதியோரத்தில் பட்ட நிலையில் உள்ள பாரிய மரம் அகற்றப்படாதுள்ளதனை படத்தில் காண்க. மேற்படி மரம் விரைவாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் பாரிய அபாயத்தை ஏற்படுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (படம்:- சோதி)

# வௌவால் கூட்டங்களுடன் இயங்கும் க.தெ.ப.நோ.கூ.ச தலைமைப் பணிமனை

## ஊழியர்கள் அவலம் போக்க கோரல்

(அலுவலக செய்தியாளர்)

வௌவால் எச்ச துர்நாற்றங்களுக்கு மத்தியில் கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்க தலைமைச் செயலக ஊழியர்கள் பணிபுரிந்து வருவதனை நேரில் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி செயலக மாடிக் கட்டடத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வௌவால்கள் குடி கொண்டுள்ள



துடன் அதனை வெளியேற்றுவதற்கான முயற்சிகளை பல முறை மேற்கொண்ட பொழுதிலும் அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லையென அங்க ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைமைச் செயலகம் அமைந்துள்ள மாடிக்கட்டடத்தின் கீழ்பகுதியின் நுழை வாயிலுக்குச் செல்லும் பொழுதிலேயே வௌவால் எச்சத்தின் துர்நாற்றம் வீசுவதனை உணர முடிகின்றது.

தினமும் காலை முதல் மாலை வரை இத துர்நாற்றத்திற்கு மத்தியில் இருந்து பணியாற்றும் ஊழியர்கள் பாரிய நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப் படுவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது

மேலும் அங்கு பணிபுரிபவர்களுடன்கலந்துரையாடிய பொழுது காலையில் பணிக்கு வரும் பொழுது துர்நாற்றத்தை நினைக்கையில் பெரும் அவஸ்தையாகவே உள்ளதெனவும் நேரம் செல்லச் செல்ல இசை வாக்கம் அடைந்து விடுவதாகவும் அவர்கள் தெரி வித்துள்ளனர். (சோ)

# இந்து தர்மாசிரியர்களுக்கென தனியான பரீட்சைக்கு ஏற்பாடு

(திருமலை)

இவ்வாண்டு தொடக்கம் தேசிய ரீதியில் இந்து தர்மாசிரியர்களுக்கென தனியான பரீட்சை ஒன்றை நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளை தயார் செய்யும் முன்னோடிக் கருத்தரங்குகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தி வருகின்றது.

இது தொடர்பான முன்னோடிக் கருத்தரங்கு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் திருகோணமலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. திருகோணமலை பிரதேச செயலக கலாசார அதிகாரி சி.மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருமலை பிரதேச செயலாளர் சுந்தரம் அருமை நாயகம் பிரதம விருந்தினராகப் பங்கு பற்றி கருத்தரங்கை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

'இந்து மதத்தில் இறுக்கங்கள் குறைந்து வருகின்ற படியால் அது பாரிய அபாயம் ஒன்றை எதிர்நோக்கியுள்ளது. இவற்றால் ஏனைய மதங்களிலும் பார்க்க இந்து மதமே கூடுதலாக பாதிக்கப்படுகின்றது.

இந்து மத பாரம் பரியங்கள், பண்பாட்டு விழுமியங்களை இளம் சந்ததியினரின் உள்ளங்களில் ஊன்ற வைப்பதன் மூலமே ஆபத்தை தடுக்க முடியும். இதில் இந்து தர்மாசிரியர்களாக பணிபுரிவோரின் பொறுப்பு பாரிய தாகும். என்று பிரதேச செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் கூறினார்.

கலாசார அதிகாரி மகேந்திரராஜா தனது தலைமையுரையில் பரீட்சைத் திணைக்களம் இவ்வாண்டு தொடக்கம் நடத்தவிருக்கும் இந்து தர்மாசிரியர் பரீட்சையில் சித்திபெறுபவர்களுக்கு இந்து சமய ஆசிரிய நியமங்களை வழங்கும் போது அரசாங்கம் முன்னுரிமை வழங்கவிருக்கின்றது. ஜி.சி.ஈ உயர் தரப் பரீட்சையில் இந்து நாகரிக பாடத்துடன் சித்தியடைந்தவர்களே இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள். இப் பரீட்சை முடிவில் வழங்கப்படும் சான்றிதழ் அரசினால் அங்கீகரிக்கபட்டதாகும். என்று தெரிவித்தார். (25)



மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் நேற்று கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருவதனைப் படத்தில் காண்க இப் பணி கடந்த சில நாட்களாக இடம் பெற்று வருகின்றது. (படம் சோதி)

# புத்தூர் இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் இல்லையேல் மக்களே அகற்றும் நிலை ஏற்படும்

## கண்காணிப்புக் குழுவுக்கு புத்தூர் கிழக்கு மக்கள் ஒன்றியம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

**மக்கள் செறிவாக வாழும் பகுதியில் உள்ள புத்தூர் இராணுவ முகாமை அகற்ற வேண்டும் இல்லையேல் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து எம் மத்தியில் உள்ள இராணுவ முகாமை அகற்றும் துர்ப்பாக்கிய நிலை உருவாகுமென புத்தூர் கிழக்கு மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இலங்கை போர் நிறுத்தக் கண் காணிப்பு குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தின் ஒரு மாவட்டமான யாழ்ப்பாண மாவட்டத்தின் கிராமங்களில் ஒன்றான புத்தூர் கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களாகிய நாம் மிகவும் செறிவாக வாழும் இடத்தில் எந்த வித காரணமுமின்றி தொடர்ந்து சிறிலங்கா ஆக்கிரமிப்புப்படையினர் பொது மண்டபம், ஆலயம், முன்பள்ளி, சனசமூக நிலையம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டு இருப்பதன் காரணமாக அவ்வூர் மக்களாகிய நாம் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். எமது சொந்த ஊரில் சொந்த வீட்டில் சுதந்திரமாக வாழும் அடிப்படை மனித உரிமையினை இழந்து நிற்கின்றோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களின் படி இராணுவத்தினர் மக்கள் செறிவாக வாழும் எமது ஊரில் இருந்து வெளியேறி இருக்க வேண்டும். ஆனால் அது இன்று வரை இடம்பெறவில்லை. மாறாக இராணுவ முகாம் பலப்படுத்தப் படுவதுடன் அங்கு தங்கியுள்ள இராணுவத்தினரால் நாளாந்தம் துன்பங்களை அனுபவிப்பதுடன் அச்சத்துடனேயே வாழ்ந்தும்வருகின்றோம். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் எமது வாழ்வில் மாற்றம் வரும் என்று எண்ணியிருந்த எமக்கு இன்று எல்லாம் வெறுமையாகவே உள்ளது.

யாழ்ப்பாண குடாநாடு சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பிடிக்குள் 1995 ஆம் ஆண்டு வந்ததன் பின்னர் நாம் பட்ட துன்பங்களுக்கெல்லாம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நல்ல மாற்றத்தை உண்டு பண்ணும் என்று எண்ணியிருந்த எமக்கு அரசியல் பணிக்காக யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்த தமிழீழ விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பாதுகாப்பற்ற சூழல் காரணமாக வெளியேறியமையானது பெரும் கவலையளித்துள்ளது. இந்த நிலையில் இராணுவத்தினரின் அத்து மீறலானது எமது கிராமத்தில் மேலும் அதிகரித்துள்ளது என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28,41)



பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் எழுதிய " பாநாடகங்கள்" நூல் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது. முன்னாள் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் சே. சோதிப் பெருமானிடம் இருந்து நூலின் சிறப்புப் பிரதியை கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் த.தேவராசா பெற்றுக் கொள்கின்றார். (செ)

# மக்கள் நடமாடும் பிரதேசத்தில் படையினர் பயிற்சி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை மற்றும் சுப்பிரமணியம் பூங்கா ஆகியவற்றை அண்டியுள்ள பொதுமக்கள் நடமாடும் பிரதேசங்களில் இராணுவத்தினர் அண்மைக்காலமாக பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

தினமும் மாலை வேளைகளில் இராணுவத்தினர் பொதுமக்கள் நடமாட்டமுள்ள வீதிகளில் மேற்கொள்ளும் இப்பயிற்சி நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

ஆயுத தாரிகளாக பெருமளவு இராணுவத்தினர் வீதிகளில் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அப்பகுதியால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மக்களை அச்சுறுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்படும் இப் பயிற்சி நடவடிக்கை கைவிடப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (33)

# தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியன செலுத்திய அனேக தொழிலாளர் தாம் செலுத்திய நிதி சம்பந்தமான ஆண்டு விபரத்திரட்டு விபரங்களையும் தாம் இளைப் பாறிய பின் தாம் செலுத்திய நிதியினையும் மீளப் பெறுவதிலும், ஊழியர் சேமலாப நிதிக் கொடையினையும் இதுவரை பெற முடியாது சிரமங் களை எதிர் கொள்பவர்கள் தொடர் பாக அரசாங்க அதிபர் ஊடாக துரித நடவடிக்கை எடுக்க யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடவடிக்கை எடுத் துள்ளது.

இது வரை ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியன செலுத்தி அதற்கான ஆண்டு விபரத்திரட்டினைப் பெறாதவர்களும் மீளக் கொடுப்பனவுகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர் கொள்பவர்களும் வணிகர் கழக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (37)

# தீவகப் பகுதியில் படையினரால் போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கை

(தீவகம்)

யாழ். தீவகப்பகுதியில் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுவதாக வாகன ஓட்டுநர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை கண்காணிப்பதற்கும் ஓட்டுநர் மற்றும் வாகனங்களின் உரிமைப்பத்திரங்கள், ஆவணங்களை பரிசோதனை செய்வதற்குமான அதிகாரம் பொலிசாருக்கு மட்டுமே உண்டு.

எனினும் யாழ். தீவகப்பகுதியில் சில இடங்களில் வீதிப்போக்குவரத்து பொலிசார் செய்யவேண்டிய போக்குவரத்து விதிமுறைபேணும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயுதங்கள் சகிதம் இராணுவத்தினர் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது. (33)

# பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களிடம் பனை தறிக்க அனுமதி வழங்கும் அதிகாரம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.குடாநாட்டில் பனைமரம் தறிப்பதற்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தினை பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பேற்று கொள்ளுகிறது என யாழ்.மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சமாசத்தினர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டில் பனைமரங்கள் கண்மூடித்தனமாக தறிக்கப்படுவதால் பனை வளம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் எதிர்காலத்தில் குடாநாடு பாலை வனமாகும் அபாயம் எதிர்கொள்ளப்படுகிறது. பனை வளம் அழிவதைத் தடுத்து நிறுத்தி முக்கியதேவைகளுக்கு மட்டும் பனைமரம் தறிப்பதற்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தினை யாழ் குடாநாட்டில் இயங்கும் பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

எனவே தமது சொந்தத் தேவைகளுக்கு தங்கள் சொந்த பனைமரங்களை பயன்படுத்த விரும்புவோர் கீழ்க்காணும் நடைமுறைகளுக்கு ஏற்ப விபரங்களை உறுதிப்படுத்தி அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

உங்கள் பிரதேசங்களில் உள்ள பனை அபிவிருத்தி சங்கங்களிடம் இருந்து விண்ணப்பப் படிவங்களை பெற்று அதனை முழுமையாகப் பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட பின்னரே மரங்கள் தறிக்கப்படவேண்டும். தறிக்கப்படும் மரங்கள் வேறுபிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வதானால் சங்கத்தின் அனுமதிக் கடிதங்கள் பெற்று மரக் கூட்டுத்தாபனத்தில் கொடுத்து அனுமதி பெறவேண்டும். மேற் குறித்த நடவடிக்கைகளுக்கு அமையாமல் தறிக்கப்படும் அல்லது எடுத்துச் செல்லப்படும் பனை மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டு முறைகேடான செயல் எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

பனைச் செல்வத்தை அழிய விடாது பாதுகாக்க வேண்டும் எனக் கருதும் அபிமானிகள், ஆதரவாளர்கள், சூழலியலாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அக்கறையோடு செயற்பட்டு மேற்குறித்த நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வேண்டப்படுகின்றனர். (கு,46)

# மதகுகளை புனரமைக்க நிதி ஒதுக்கீடு இல்லை

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த நிலையில் காணப்படும் மதகுகளைப் புனரமைப்பதற்கு போதியளவு நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கம் செய்யவில்லை என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஏராளமான மதகுகள் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் மழை காலங்களில் வெள்ள நீர் வழிந்து ஓட முடியாத நிலையில் தேங்கி நின்று வீதிகளைச் சேதமாக்குவது மட்டுமன்றி மக்களின் வாழ்விடங்களுக்குள்ளும் வெள்ள நீர் புகும் நிலைமை காணப்படுகிறது.

இந்த நிலைமைகளினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் கவனத்தில் கொண்டு சேதமடைந்த நிலையில் உள்ள மதகுகளை புனரமைக்க முயற்சித்தும் உரிய நிதி ஒதுக்கீடின்மையால் இம் மதகுப் புனரமைப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

அரசின் இத்தகைய அசமந்தப் போக்குக் குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# பருத்தித்துறை நகர்ப் பகுதியில் கட்டாக்காலிகள் தொல்லை

(வடமராட்சி)

யாழ் .வடமராட்சி பருத்தித்துறை நகர்ப்பகுதியில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக பராமரிப்பாளர்களது கவனிப்பின்றி பருத்தித்துறை நகர்ப் பகுதிகளில் நடமாடும் ஆடு,மாடு மற்றும் நாய்கள் என்பன வீதிகளிலும். பேருந்துத் தரிப்பிடம் சந்தை போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களிலும் அசுத்தம் செய்து வருகின்றன.

இந்த நிலைமைகள் தற்போதைய மாரிகால சூழ்நிலையில் பெரும் சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தியுள்ளன. இதைவிட கவனிப்பாரற்ற நிலையில் வீதிகளில் நடமாடும் கட்டாக்காலிகளால் அடிக்கடி வீதி விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன.

எனினும் இவற்றை கவனத்தில் கொண்டு கட்டாக் காலிகளை ஒழிப்பதற்கான நட வடிக்கைகள் எதனையும் ஆக்க பூர்வமான முறையில பருத்தித்துறை நகர சபையினர் எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# பனம் வெல்ல உற்பத்தி குடாநாட்டில் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இந்த வருடம் பனம்வெல்ல உற்பத்தி பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கூறியுள்ளது.

பனம் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கான உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதன் காரணமாகவும் யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனம் வெல்லத்தை சந்தைப்படுத்தி இலாபம் காட்டுவதற்கு ஏற்ற சந்தை வாய்ப்புகள் இல்லாமை காரணமாகவும் பனம்வெல்ல உற்பத்தியாளர்கள் பலர் தமது வெல்ல உற்பத்தி நடவடிக்கைகளை கைவிட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே இப்பனம் வெல்ல உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் முன்னர் யாழ். குடாநாட்டில் பத்திற்கும் மேற்பட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் வெல்ல உற்பத்தியில் ஈடுபட்ட போதும் இந்த ஆண்டில் அச்சுவேலி மற்றும் கொடிகாமம் ஆகிய பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள் மட்டுமே வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளமையையும் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

# இலட்சியப் பயணத்தில் பன்னிரு ஆண்டுகள்.....

கார்த்திகை முதலாம் திகதி காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தின் பன்னிரண்டாம் ஆண்டு நிறைவு விழா. இந்தச் செய்தியைக் கேட்டதும் ஏதாவது ஒரு ஆக்கம் பத்திரிகைக்கு எழுத வேண்டும் என ஆவல் கொண்டேன். அந்த ஆவலுக்கு வலுச்சேர்க்கும் நோக்கோடு எனது கால்கள் காந்தரூபன் அறிவுச்சோலையின் பிரதம நிர்வாகியான செ.புவியரசன் மாஸ்ரரின் நடுவப் பணியகம் நோக்கி விரையத்தொடங்கின. எளிமையான முறையிலும், அழகான முறையிலும், வடிவமைக்கப்பட்ட அவருடைய அறை வாசலில் நின்று மன்னிக்க வேண்டும் என்ற பண்பாட்டை உதிர்த்துவிட்டு உள் நுழைந்தேன். அனுமதி தந்ததற்கான அடை யாளமாக புன் முறுவல் செய்தவாறே அமருங்கள் (உட்காருங்கள்) என்றார். பதிலுக்கு பல் தெரியாத புன்னகையால் நன்றி சொல்லி அமர்ந்தேன். என்ன ஏதாவது...? என்று இழுத்தார். ஆம் நான் பத்திரிகைக்கு அறிவுச்சோலை பற்றி ஆக்கம் எழுதப்போகின்றேன். முதலில் அனுமதி தேவை இரண்டாவதாக சில தரவுகள் தேவை என்று சொல்லியவாறே அவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். "நீங்கள் ஆக்கம் எழுத அனுமதி மட்டுமல்ல ஊக்கமும் தருவோம் இது எங்களின் கடமையும் கூட நீங்கள் தேவையான தரவுகளை நிர்வாக செயலக உத்தியோகத் தர்களிடம் வாங்குங்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன் என்றார். ஏதோ அவசர வேலை செய்வதற்கான ஆயத்தங்களில் நிற்கின்றார் போல இனி நான் சுணங்காமல் நிர்வாக செயலகம் சென்று விபரங்களைச் சேகரிப்போம் என்று நினைத்தவாறே நன்றி சொல்லி அங்கிருந்து புறப்பட்டேன்.

"அட நான் என்னை அறிமுகப்படுத்தாமல் எழுதிக் கொண்டே போகிறேன் என்ன? எனது பெயர் வித்தகன் நான் கடந்த ஐந்து வருடங்களாக காந்தரூபன் அறிவுச்சோலை பிள்ளைகளை பராமரிக்கின்ற பணியாளனாக உள்ளேன் அவ்வளவும் போதும் நான் எழுதப்போவது என்னைப் பற்றியல்ல அறிவுச்சோலை சிறுவர் இல்லம் பற்றி. புவியரசன் மாஸ்ரர் உட்தொலை பேசியூடாக என்னுடைய செய்தியை சொல்லியிருக்கின்றார் போலும் நிர்வாக செயலக வாசலை அடைந்தவுடன் "வாருங்கோ" என்று இனிமை யான குரலில் வரவேற்றார்கள். எனக்கென்று ஒரு மேசையைக் காட்டினார்கள். சிறிது நேரத்தில் அந்த மேசையில் தரவுகள் நிறைந்த கோவைகளை அணி வகுப்பில் அமர்த்தினார்கள். நான் ஆக்கம் எழுத தரவுகள் சேகரிக்க ஆரம்பித்தேன். கல் கலராக இருந்த கோவை களை தட்டத் தட்ட என்னுள் ஆக்கம் எழுதும் ஆவல் ஊற்றெடுக்கத் தொடங்கியது!

ஒரு கோவையில் தமிழீழத் தேசியத் தலைவரின் ஆசிச் செய்தி அழகாக ஆவணப் படுத்தியிருந்தார்கள். அந்தச் செய்தியை வாசித்த போது தான் நான் வேலை செய்யும் இடத்தின் மேன்மை எனக்கு விளங்கியது.

போராட்ட புயல் வீசும் எமது மண்ணில் பேரோட்டம் வேரோட்டம் விட்டு விரைவாக வளர்ச்சியைக் கண்டு வரும் எமது அமைப்புக்களில் ஒன்று காந்தரூபன் அறிவுச்சோலை. இந்த சோலையில் உள்ள இளம் செடிகள் துளிர்த்து பூத்து காய்த்து செழித்து வளர்வதைக் காண எமது நெஞ்சம் நிறைகிறது.

முழுமையான மனிதர்களை உருவாக்கும் புதுமையான பரிசோதனைக் களமாக காந்தரூபன் அறிவுச்சோலை அமைய வேண்டும் என்பது எனது ஆவல் இளமையில் இருந்து தான் முழுமையை வளர்க்க முடியும். முழுமை எனும் போது அறிவு ஆற்றல் அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனித வளர்ச்சியையே குறிப்பிடுகிறேன். வல்லவர்கள் நல்லவர்களாக நேர்மைத்திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்படியான சிறந்த மனிதர்களை முழு மனிதர்களை உருவாக்குவதே அறிவுச் சோலையின் இலட்சியமாக அமைய வேண்டும்.

எதிரியின் அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் நாம் ஆக்க வேலைகளைச் செய்து வருகிறோம். போர்ச்சூழலால் குடும்பம் சிதைந்து அனாதரவான நிலைக்கு ஆளாகும் சிறார்களை எமது இயக்கம் அரவணைத்துக் கொள்கிறது. அவர்களை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க பராமரிப்பு இல்லங்களையும், பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. தமிழீழத்தின் எதிர்கால தலைவர்களாக, அறிவு ஜீவிகளாக, சமூக நிர்மாணிகளாக இவர்களை வளர்த் தெடுப்பதே எமது நோக்கம்.

எமது இலட்சியக்கனவை நிறைவு செய்யும் வகையில் ஒரு உறுதியான அத்திவாரத்தை கட்டியெழுப்பி அறிவுச்சோலை செயற்பட்டு வருகிறது. பரிசோதனைக்கல்விக்கும் பராமரிப்பிற்கும் முன்னுதாரணமாகத் திகழும் அறிவுச் சோலையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் அதன் பொறுப்பாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏனை யோருக்கும் எனது பாராட்டுக்கள்.

இது தலைவர் அவர்களுடைய ஆசிச் செய்தி என்று குறிப்பிட்டு குறிப்பெடுத்துக் கொண்டேன்.தலைவரின் ஆசிச்செய்தியின் காத்திரம் என்மன ஓட்டப்பாதையை நெறிப்படுத்தியது. கண்முன்னே இருந்த கோவைகளுக்குள் இருந்த இன்னுமொரு சிவப்புக்கலர்கோவை என் கண்ணில் பட்டது. "காந்தரூபன் அறிவுச்சோலையின் கொள்கை விளக்கம்" என்று எழுதி கோவையை அடையாளப்படுத்தியிருந்தார்கள். அதை முற்று முழுதாக வாசித்து அதில் எனக்கு தேவையான விடயத்தை குறித்து எடுத்துக் கொண்டேன்.

உறவுகளற்ற பிள்ளைகளையும் உறவு களால் கைவிடப்பட்ட பிள்ளைகளையும் தத்தெடுத்து அவர்களைக் கல்வியிலும் பிற மனித வளர்ச்சித்துறைகளிலும் மேம்படுத்தி முழுமையுடைய மனிதர்களாக்கி நாட்டினை நிலைநிறுத்தி வைத்திருக்கும் தூண்களாக ஆக்குவதே எமது நோக்கம்.

இந்தப்பிள்ளைகள் அறிவாற்றலுடன் வளர்ந்து பதினெட்டு வயதைத்தாண்டு கின்றபோது தாமாக முடிவெடுக்கும் தகுதி யைக் கொடுக்கிறோம். இவர்கள் தங்களுக்கு விரும்பிய துறைகளைத்தேர்ந்தெடுத்து ஒளிமய மான வாழ்வியலுக்குக்குள் செல்லமுடியும்.

அடுத்து கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன் பற்றி சில குறிப்புக்கள் எடுக்க வேண்டும் என்ற நோக்கோடு கோவை களுக்குள் தேடினேன். இருந்தது இப்படி.

"அண்ணை நான் ஒரு அநாதை அப்பா அம்மா ஆருமே இல்லாமல் அலைஞ்சு திரிஞ்சன் அப்படி இருக்கிறகாலத்தில்தான் ஒரு அப்பாவும் அம்மாவும் என்னை எடுத்து தங்கட பிள்ளை மாதிரி வளத்தினம். அதற்கு பிறகு நான் இயக்கத்துக்கு வந்தன். நீங்கள் என்னை அன்போடையும் பாசத்தோடையும் வளத்தியள் நான் வருத்தங்களால் வாடேக்கை எனக்கு வேண்டிய எல்லாத்தையும் செய்து கவனிச்சியள் இப்ப உங்களிடம் ஒன்று கேட்கப் போறன் தயவு செய்து எனக்காக நீங்கள் அதைச்செய்ய வேணும்" காந்த ரூபனுக்கு பக்கத்தில் இருந்த தலைவர் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தார்.

"என்னை போல எத்தனை பொடியள் தாய், தந்தை இல்லாம அநாதையாக வாழுறாங்க வாழ இடமில்லாமல் படிக்க வசதியில்லாம எவ்வளவோ ஏக்கங்களோடையும் துன்பங்க ளோடையும் அவங்கள் இருப்பாங்கள் என்பதை நான் அனுபவத்தில் கண்டனான் அண்ணை நீங்கள் என்னை அன்போட கவனிச்சுப் பார்த்ததைப்போல அவங்களையும் கவனிக்க வேணும் அவங்கள் எந்தக்குறையுமில்லாமல் வாழவும், நன்றாகப் படிக்கவும் வசதி செய்து கொடுங்கோ அவர்களுக்கு என்று ஒரு இடத்தை அமைச்சு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் குடுத்து விடுங்கோ அண்ணை".

இந்த வரிகள் ஒவ்வொன்றையும் வாசித்துமுடித்தபின் என்னால் அடுத்த கோவைகளைத்தட்ட நீண்ட நேரம் பிடித்தது. உறவுகளின் இழப்பு உணர்வுகளை எவ்வாறு வலி கொள்ள வைத்திருக்கிறது. அந்தக் கரும்புலி வீரனின் எண்ணங்களின் கனம் என் மனதை வாட்டியது.அந்தமாவீரனுக்காக மௌனமாக சில நிமிடம் அஞ்சலி செய்து விட்டு: மேலும் கோவைகளைத்தட்டினேன் ரீ குடியுங்கோ" என்றவாறு ஒரு பெண் உத்தியோகத்தர் குரல் தந்தார் எனது மேசையில் வட்டவடிவான மட்டை ஒன்றில் சில்வர் கப் ஒன்று பளிச்சிட்டவாறு இருந்தது. நான் தேநீரை அருந்திக்கொண்டிருக்கும்போது இரண்டு புதிய கோவைகளை கொண்டு வந்து தந்தார்கள். இது சுனாமிக்கு பின் பாதிக்கப்பட்ட பிள்ளைகளைப் பராமரிக்கும் விபரம் அடங்கிய கோவை. அந்தக்கோவைகளைத் தட்ட ஆரம்பித்தேன்.அதில் இருந்த குறிப்புகளில் தேவையானவற்றை குறிப்பெடுத்தேன்.

"சிறுவர் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நிலையம்" என்று பெயர் கொண்டு அரசசார்பற்ற நிலையமாக பதிவு செய்து காந்தரூபன் அறிவுச்சோலையின் கிளை நிர்வாக அலகாக இயங்கி வருகிறது. சுனாமியால் தாய், தந்தையை, உறவுகளை இழந்த பிள்ளை களை வெளித்தங்கல் முகாமில் வைத்தே பராமரித்து வருகிறது. 116 பிள்ளைகளை இந்த நிலையம் பராமரித்து வருகிறது.கிழமைக்கு ஒரு தடவை ஒவ்வொரு பிள்ளைகளையும் சந்தித்து தேவைகளை அறிந்து அதற்கான பொருளோ, பணமோ எதுவானாலும் வழங்கி வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்டிருப்பதால் நீரினால் ஏற்பட்டிருக்கும் தோல் வருத்தங்கள் கூடிய பிள்ளைகளும் உள்ளனர். மருத்துவச் செலவுக்கே கூடிய செலவு செய்யப்பட்டிருக்கும் அடுத்த கோவையின் மேல் "கிளை நிறுவனம் பழுகாமம்" என்று அடையாளப்படுத் தப்பட்டிருந்தது. அதில் உள்ள குறிப்புகளை எடுக்க ஆவலானேன்.

மட்டக்களப்பிலுள்ள பழுகாமம் என்னும் ஊரில் 26.01.2005 அன்று கிளை நிறுவனமாக காந்தரூபன் அறிவுச்சோலை ஆரம்பிக்கப்பட்டது. சுனாமியால் உறவுகளை இழந்த பிள்ளைகளையும், இராணுவ ஆக்கிரமிப்பால் உறவுகளை இழந்த பிள்ளைகளையும் உள்வாங்கி கிளை நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

ஆக்கத்தை முழுமைப்படுத்துவதற்கு தேவையான முக்கிய தரவுகள் என்ன தேவை என யோசித்தேன். தேவையானவை எது என எழுதி கோவைகளுக்குள் தேட ஆரம்பித்தேன்.

ஆரம்பித்த திகதி:01.11.1993 ஆரம்பித்த இடம்:இராச பாதை வீதி.கோப்பாய் யாழ்ப்பாணம். ஆரம்பித்து வைத்தவர்.: தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள். காந்தரூபனின் பெயர் இணைக்கப்பட்டதன் காரணம்:-10.07.1990 அன்று வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன் தேசியத்தலைவரிடம் கேட்டதற்கமையவே இச் சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் காந்தரூபன் அறிவுச்சோலை என்று பெயர் வந்தது. பன்னிரண்டு வருடங்களில் காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம் இலக்கு நோக்கிய நகர்வில் சாதித்த பட்டியலையும் திரட்ட எண்ணினேன்.இதுவரை எட்டு பிள்ளைகள் பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளார்கள்.

கலைப்பிரிவில் நால்வர், வர்த்தகப்பிரிவில் ஒருவர் கணிதப்பிரிவில் மூவர் இதைவிட பல பிள்ளைகள் சமூக வாழ்வில் இணைந்து முழுமையான மனிதர்களாக தங்கள் உழைப்பில் வாழ்ந்து வருகிறார்கள். இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சசிதரன் சங்கீதன்-124,சிவஞானம்,ஆதவன்-145, கருணாகரன் ஜனதீபன்-136 புள்ளிகளைப்பெற்று சித்தி யெய்தியுள்ளார்கள்.

**சி.வித்தகன்**

"முழுமையான மனிதர்களை உரு வாக்குவதே அறிவுச்சோலையின் இலட்சியமாக அமைய வேண்டும்" என்ற தலைவரின் அந்த உன்னத வரிகளை நினைத்தவாறே நிர்வாக செயலக பணியாளர்களுக்கு நன்றி சொல்லி விடைபெற்றேன்.

அந்த மாஞ்சோலையில் குருவிகளின் மத்தியில் ஒருமாணவன் கவிதை வரிகளை மனனம் செய்து கொண்டிருந்தான்.

"நாட்டைத் தாங்கும் தூண்களாவோம்-விண்
தட்டை ஏவும் பொறிகளாவோம்-
அண்ட வெளியில் செய்மதிக்
கூட்டைக்கட்டும
குருவிகளாவோம்-அணுகுண்டு
முட்டை இடும் மயில்களாவோம்".

இந்த வரிகளை திலீபன் என்ற பெயருடைய மாணவன் நறுக்கு நறுக்கென பொறிதெறிக்க உச்சரித்தான். அவன் குரலில் தெரிந்தது இலட்சிய வெறி அந்த வரிகளை கேட்டவாறு நான் ஒரு அமைதியான இடத்தைத்தேடினேன். அந்த மாஞ்சோலை தோப்பினுள் ஒரு இருக்கையை போட்டு ஆக்கம் எழுத ஆரம்பித்தேன்.








(சி-13204)

எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்!

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
கூறைச் சேலைகள்
பட்டு வேட்டிகளுக்கு
யாழ்நகரில் நைராசியான நிறுவனம்

# சீமாட்டி புடைவைக்கடல்

122,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P-021-2222196



(சி-13205)

தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்

புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப்பெற்றிட....

முக அமைப்பிற்கேற்ப சங்குப்பற்களைப் பொருத்திட... மிதப்புப்பற்களுக்குக் கிளிப் பொருத்திக் கொள்ள கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்.

# எரிக்கணேஷ்

பல்கட்டும் இடமும் மூக்குக் கண்ணாடி அகமும்

564,566. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்:
சுன்னாகம்.
கொக்குவில் சந்தி.



(சி-13206)

RAMCO CEMENT

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# ராம்கோ சீமெந்து
# RAMCO CEMENT

ஆசியாவின் முதல் தர(நம்பர்-1)

SLS -107 அங்கீகாரம் பெற்றது
ISO -9002தரம் பெற்றது
BSS-12-1991தரத்திற்கு அமைவானது

நூற்றாண்டு காலமாக பாவனையில் உள்ள
போட்லான்ட் சீமெந்து ராம்கோ சீமெந்து.
பாவித்துப்பயன்பெற்றவர்களுக்கு இதன்
தரம் தெரியும். தரம் தெரியாமல் தவிக்கிறீர்களா?
இது பிரித்தானிய தரத்திற்கு அமைவானது.
உலக தரம் வாய்ந்தது. இலங்கைத்தரம் வாய்ந்தது.
நூறு வீதம் ஓ.பி.சி. சீமெந்து தான் ராம்கோ சீமெந்து.
தரத்தைத்தெரிந்து விட்டீர்களா? உடன் நாடவேண்டிய இடம்

யாழ் மண்ணில் ராம்கோ சீமெந்து ஏகஇறக்குமதியாளர்கள்

# ஈஸ்வரபகவான் & கொம்பனி

இல:91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021 2222350

(சி-13207)

RAMCO CEMENT

எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

**STAFFORD MOTOR CO-LTD**

இன் அங்கீகரிக்கப்பட்ட
(3S) யாழ் முகவர்

BREAKTHROUGH 3 YEAR WARRANTY

HERO HONDA

# World No. 1

Two-Wheeler Company

புதிய அறிமுகம்..!

HERO HONDA Glamour Live the 5 life



SM Graphics


# RG இரத்தினகோபால்ஸ்

இல:-63,65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். TP-0777-340056 021 222-6185


அழகிய தங்க நகைகளை
நவீன வடிவமைப்புக்களில்
செய்து பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஸ்தாபனம்
இதயம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்
சிறி மீனாட்சி
தங்க மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
இல.187 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே: 021 222 6109
சி.13188


அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்
எங்களிடம் வீடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் தேவையான
அனைத்து தளபாடங்களையும்
பெற்றுக்கொள்ள யாழ் மண்ணில் முத்திரைபதிக்கும் ஒரே நிறுவனம்
ஏசியன் தளபாட நிலையம்
இல:133 மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே: 0777 536108
சி.13189


அனைவருக்கும் இதயம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்
யாழ்ரன் மல்ரி சென்ரர்
YARLTTON MULTI CENTER
எலக்ரோனிக்ஸ், எலக்ரிக்கல்ஸ், இலத்திரனியல்
பொருட்களின் சங்கமம்
இல:48 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
சி.13190


ஐடியல் கேட்டின் டெக்கோர்
நவீன முறையில் உங்கள் இல்லங்கள் ,அலுவலகங்கள், வங்கிகள்,
கணனி மையங்கள், போன்றவற்றிக்கு பிரமிப்பூட்டும் வகையில் அவுஸ்திரேலியாவிலிருந்து
நவீன ரக கேட்டின் (Vertical Blind)திரைச்சிலைகளை உங்களுக்கு நியாயமான விலைகளில் வழங்குவோர்
ஐடியல் கேட்டின் டெக்கோர்
இல: 96 மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
ஓடரின் பெயரில் வேலைகள் செய்து கொடுக்கப்படும்
உடன் தொடர்புக்கு:-
077-3013239-0777 563946
சி.13191


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
திருமணப்பட்டுப்புடைவைகள்,
மற்றும் றெடிமெட் ஆடை
வகைகளையும் சீனா.இந்தியா
ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு
இறக்குமதி செய்பவர்கள்!
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்
இல:42,44, பெரியகடை,யாழ்ப்பாணம்
(சி-12993) தொ.பே:021-222 2985


எங்களின் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
எங்களிடம் கட்டடப் பொருட்கள், பெயின்ட் வகைகள்,
வாகனங்களுக்கு தேவையான ஓயில் வகைகளை நியாயமான
விலையில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.
கஜமுகன் ஹாட்வெயர்
இல.147,149. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-12994)


எ்மது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!
அசல் 22 கரட் தங்க ஆபரங்களுக்கு யாழ் நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்
மைதிலி நகைமாடம்
இல:89,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 7902
யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
157.செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பே:011-2396239
(சி-12995)


எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
உங்கள் அழகிய தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
கலையரசி நகை மாடம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
பிரதான வீதி, முல்லைத்தீவு.
(சி-12996)


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அழகுக்கு அழகு செய்யும் அழகிய நவீன முறையில்
வடிவமைக்கப்பட்ட தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்
இளவரசி நகைமாடம்
கனகபுரம் தெரு, கிளிநொச்சி
(சி-12997)
உரிமையாளர் நா. ருதஸ்குமார்


சைவ உணவுப்பிரியர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
ஸ்ரீ வாணி விலாஸ் சைவ உணவகம்
இல:372,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:077-9007837, 021-222 9559
(சி-12998)
உங்கள் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய
விஜயம் செய்யுங்கள்
ஸ்ரீ வாணி விலாஸ் சைவ உணவகம்


தீபாவளி நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!
22 கரட் தங்க நகைகளை கைதேர்ந்த தொழில் வல்லுனர்களால் மனதைக்
கவர்ந்த டிசைன்களில் செய்து பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்
பி.வி.ஆர் ஜுவலறிஸ்
முல்லைசாலை,
புதுக்குடியிருப்பு.
முல்லை நகர்,
முல்லைத்தீவு.
(சி-12999)

**அண்ணா தொழிலகம் அண்ணா கோப்பி சார்பில் அனைவருக்கும் எமது இனிய தீபாவளிநல்வாழ்த்துக்கள்**

*எங்களிடம் வாடிக்கையாளரின் நன்மைகருதி சுத்தமான அரிசி மா, குரக்கன் மா, ஆட்டா மா, தோசை மா, கடலை மா, ஒடியல் மா வகைகளும் அதிவிசேடம் நிறைந்த பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பினித் தாய்மார்கள் உண்ண வேண்டிய சத்துணவு மா, (ஜீவாகாரம்) எம்மிடம் கிடைக்கும்.*



யாழ்.மண்ணில் நீண்ட பல வருடங்களாக மக்களின் நன்மதிப்பை பெற்று விளங்கும் ஒரே நிறுவனம்

# அண்ணா தொழிலகம்



கே.கே எஸ் வீதி, இணுவில்.(தொ.பே: 222-3565)
எமது கிளை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (தொ.பே: 222-2199)

(சி.13173)

---

**உங்களை அன்புடன் வரவேற்கும் சிவகாமி லொட்ச்**





# SIVAKAMY LODGE

**அனைவருக்கும் இனிய தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்**

**திருநெல்வேலி மண்ணில் அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதி**

தொ.பே: 0777111388
0776204768
0777176909

(சி.13178)

---

## உங்களுக்கோர் சேமிப்பு
## உங்களுக்கோர் இல்லம்.

காணி வாங்குதல்,வீடு கட்டுதல்,வீடு வாங்குதல், வீடு திருத்தியமைத்தல் போன்ற தேவைகளுக்கு கடன் பெறசேமிப்பு கணக்கு ஒன்றை எங்களுடன் ஆரம்பியுங்கள்

மேலும், அதியுயர் வட்டியில் நிலையான வைப்புக்கணக்குகள்
முதியோர் நிலையான வைப்பிற்கு விசேட சலுகைகள்.

**பிரதிநிதி ஒருவரின் ஆலோசனை பெற அழையுங்கள் 021.2226258**

CBSL

(இலங்கையில் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தனியார் துறை வீடமைப்பு சங்கமாகும்)

(சி.13179)

செலிங்கோ வீடமைப்பு கடன் சங்கம் (லிமிட்டட்)
24 கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்
தொ.பே 021 2226258

---

DIGITAL

தீபாவளி நல் வாழ்த்துக்கள்! **SUPER SHOW**

DIGITAL COLOUR LAB
206,Jampettah street, colombo-13
Tel:- 011-4-618370
Print Size 3R to 12"x18"
Calender & Greeting Card Printing
Index & Conduct sheet Prinding
Automatic Scratch & Dust Elimination
**01 hour Photo Print Servise**


V.Ravindrakumar
propeator



Frontier-570

DIGITAL A 01 COLOR LAB
&
Super show Video Audio Center
149, Kasturiyar Road, Jaffna
T.P:- 021-2222082

Ravi



Frontier-570
studio
198/5, navalar Road,Jaffna.
Tel:- 021-222-2435

ATS ENGLAND

# குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

நிறுவனத்தினர் தனது வாடிக்கையாளர்கள், வர்த்தகப்பெருமக்கள்,
நண்பர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.

QUALITY GUARANTEED · Automotive and Tractor Spares · ATS ENGLAND · WORLDWIDE EXPORTERS

LEYLAND · TATA · GOMMA AUTO ELECTRICAL PARTS

டாட்டா, அசோக் லேலண்ட், இசுசு,
டொயாட்டா, மிற்சுபிசி மற்றும்
அனைத்துரக வாகன உதிரிப்பாகங்களும்
குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

M.F. மசி பேர்குசன் 35/ 135 /240
FORD 3000, 3600 – ரைக்டர்களின்
சகலவிதமான உதிரிப் பாகங்களும்,
கலப்பை மற்றும் அதற்கான உதிரிப்பாகங்களும்
முதல்தர இறக்குமதியாளர்களும்
விநியோகஸ்தர்களும்

வவுனியா நகரில்
வாகன உதிரிப்பாகங்கள்
விற்பனையில் தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்.

# KM குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

இல: 52, 2ம் குறுக்குத் தெரு, வவுனியா.
T.P: 024-2221845, 024-2221842

நீர் இறைக்கும் இயந்திரம்,
மோட்டார் சைக்கிள், லான்மாஸ்ரர்
ஜெனரேற்றர் உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

இல: 110, பஜார் வீதி, வவுனியா.
T.P: 024-2222475, 024-2222474

(சி-10730) (சி-12987)

எமது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

வீடுகளுக்குத்தேவையான கட்டடப்பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள

யாழ்மண்ணில் நேர்மை நாணயம் நம்பிக்கை கொண்டு விளங்கும்...

# பாக்கியரத்தினம் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்

பிரதான வீதி, சங்கானை தொ.பே:060-2212713

கிளை நிறுவனம் **தரண் வணிக நிலையம்**

இல:130,132, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

தொ.பே. 222 2664, 222 7184

(சி-13165)



Sky Computers (pvt)Ltd

அனைவருக்கும் எமது நிறுவனத்தின் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

# ஸ்கை எலக்ரோனிக்ஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே-222 5349



*Sky Computers (pvt)Ltd*
*89, Kandy Road, Chundukkuli,*
*Jaffna. T.P. 021- 4590325*
*email:skycom@wow.lk*

*Sky Computers System*
*89A, Kandy Rd,*
*Jaffna.*

(சி-13166)



# WESTERN UNION®

உலகம் பரந்து வாழும் தமிழ் உறவுகள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ் மண்ணில் அனைத்துச்சேவைகளும் ஒரு குடையின் கீழ்



குமார் ஏஜென்ட் & கொம்யுனிகேஷன்

குமார் முகவர் தபால் நிலையம்



133/3 மின்சார நிலைய வீதி,
மத்திய பேருந்து நிலையம் அருகாமை,
யாழ்ப்பாணம். T.P 0212227727.

Money Transfer, Internet, E.mail, I.D.D, Local Calls, Fax, Express Parcel Service, S.L.T , Pass Port , Internet, Kit, Mobitel , Super Cards, Lamination & Photo Copy.

உங்கள் அன்புக்குரியவரிடம் இருந்து ஒரு சில நிமிடங்களில் உலகெங்கிலும் இருந்துவெஸ்ரன் யூ னியன் மூலம் பணத்தைப்பெற்றிடவும் உள்நாட்டு வெளிநாட்டு தபால் பொதிகள் அனுப்பிடவும் விமானப்பயணச்சீட்டு கொழும்பு யாழ் சொகுசு(ஏசி) பஸ் ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளவும் தொலைபேசி உள்ளூர் வெளியூர் சேவைகள், கிட்காட், போட்டோ கொப்பி, இன்ரநெற் காட், லமினேற்றிங் குறைந்த கட்டணத்தில் துரித கதியில் பெற்றிடவும்..

சிறிலங்கா காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் நேரடி முகவர் MMBl ன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

# குமார் முகவர் தபால் நிலையம்

133/3 மின்சார நிலைய வீதி, மத்திய பஸ்நிலையம் அருகாமை யாழ்ப்பாணம்.

(சி-13167)


நியூ லலிதா ஸ்தாபனத்தார் சார்பில் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
யாழ் மண்ணில் தரத்திற்கும் உறுதிக்கும் ஆபரண மாளிகை நியாயவிலை அதிநவீன டிசைன் மக்கள் சேவையில் நீண்ட காலம் நன்மதிப்பைக் கொண்ட நகைமாடம்
நியூ லலிதா நகை மாடம்
வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் எமது கிளைகள்
கொழும்பு 2470396
இந்தியா 24350938
கனடா 4162616185
இல:191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:077 6027746
(சி-13161)


எங்கள் இனிய தமிழ் உறவுகளுக்கு
இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
இணுவில் மண்ணில் நீண்ட காலம் மக்கள் சேவையில்
நன்மதிப்பைப்பெற்ற ஒரே நிறுவனம் அனைத்து ஆடைகளின் நந்தவனம்
குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவருக்குமான தெரிவுகள்
கணேசன் சென்ரர்
GANESAN CENTRE
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
தொ.பே:021-222 5708


எமது அன்புக்குரிய தமிழ் சகோதரர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
சகல விதமான வாகனங்களையும் சிறந்த முறையில்
அனுபவமிக்க பயிற்சியாளர்களால் பயிற்றுவித்து
சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள
யாழ் மண்ணில் நம்பிக்கையான ஸ்தாபனம்
TRAINING BUS
Metro Rapid
T.P.: 024 - 2223518
NELSON LEARNERS
No. :86,
Bus Stand Complex,
Vavuniya.
நெல்சன் லேணர்ஸ்
இல:109, வை.எம்.சி.ஏ கட்டடம்,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே:071 2532144
ஏனைய மாவட்டங்களில் எமது கிளைகள்:
இல:86, பஸ்நிலையம் மேல்மாடி, வவுனியா.
தொ.பே:024-2223318
இல:06, முதலாம் மாடி, விக்டோரியா கட்டடம், மன்னார்.
தொ.பே:0777 656161
(சி-13163)


அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
தங்க நகை உலகில் தனித்துவம் மிக்க
நவ நாகரிக டிசைன்களில் தரம்மிகு
தங்க நகைகளை உங்கள் எண்ணம்
போல் வடிவமைப்போர்
நியூ நிறைஞ்சனாஸ்
நகை மாளிகை
இல:83/1கஸ்தூரியார் வீதி, செம்மா தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே:071 2270458, 077 6070679




எமது பாசத்திற்கும் அன்பிற்கும் உரித்துடைய
தமிழ் மக்களுக்கு எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

தரத்திற்கும் சுவைக்கும்

# அமுல் கிறீம் கவுஸ்

இல:452 மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2225707

(சி.13187)






அன்புக்குரிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

மிக்சர் தயாரிப்பில் முன்னோடிகள் காரம், இனிப்பு வகைகள் அனைத்து
தயாரிப்புக்களையும் தயாரித்து வழங்கும்

# அல்பா மிக்சர்

இல:140 பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி,
திருநெல்வேலி, தொ.பே: 021 2226695

(சி.13185)





ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மரத்தளபாடத் தொழிலகம்
சார்பில் எங்களின் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது நிறுவனத்தின் சார்பில்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

எங்களிடம் உள்ளூர் மரங்களான-பாலை முதிரை, வேம்பு, பலா, மா, நாவல்,
தேக்கு, சவுண்டலை மரங்களும் வெளியூர் கம்பஸ் மரங்களும், உள்நாட்டிலும்
வெளிநாட்டிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தீராந்தி வகைகள், ஓடுகள்,
அரிந்த சீமெந்துக் கற்கள், பூக்கற்கள் மற்றும் வீட்டு அலங்காரத் தளபாடப் பொருட்கள்,
கதவு நிலைகள், ஜன்னல் கூரைக்குத் தேவையான மரங்கள் போன்றவற்றை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மரத்தளபாடத்
# தொழிலகம்

அரச அங்கீகாரம் பெற்ற தன்னிகரில்லா நிறுவனம்

பதிவு. இல- REGD NO-TD/172/J எம்மிடம் மக்களின் நன்மை கருதி குறைந்த செலவில் ஒப்பந்த அடிப்படையில்
கட்டடங்கள் வீடுகளுக்கான கூரை வேலைகள் நிலை, கதவு வேலைகள் குறித்த நாட்களில் அனுபவம் வாய்ந்தவர்களால்
நியாயமான விலைகளில் செய்து கொடுக்கப்படும். உடனே நாடுவீர் தரம் நிரந்தரம்
மக்களின் மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

இல:12, பிரதான வீதி,
சாவகச்சேரி.

(சி.13187)

அனைவருக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றோம்
வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும்
இலத்திரனியல் பொருட்கள் எம்மிடம்
கிடைக்கும்
V.K. இராசரத்தினம்
இல: 95 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே: 222 2056
(சி.13177)

எமது சகோதரர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்
யாழ் போன் சொப்
இல: 10 நவீன சந்தை மேல்மாடி
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
தொ.பே: 222 7125
222 3817
3 Star Hotel
162 Hospital Road
Jaffna
(சி.13168)

அனைவருக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
நவநாகரிக ஆடைகள்
உலகின் ரம்மியம்
மகாநதி புடவையகம்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி.13169) தொ.பே: 222 2552

நவீன அழகிய
சிங்கப்பூர் நகைகளுக்கு
நீங்கள் நாட வேண்டிய
ஸ்தாபனம்
சிங்கப்பூர்
ஜுவல்லறி
இல:93,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4590260
(சி.13170)

பிள்ளையார் ஹோட்டல் Aதர தங்கும் விடுதி
யாழ்.நகரில் வெளிநாட்டினர் மற்றும் உள்நாட்டினர்களுக்கு
அனைத்து வசதிகளுடன் கூடிய 16 குளிரூட்டப்பட்ட
அறைகளுடன் உணவகம் மற்றும் ஹோட்டல் 300 பேர் வரை
அமரக்கூடிய அனைத்து வைபவங்களுக்கும் ஏற்றவகையில்
குளிரூட்டப்பட்ட மண்டபம் இருக்கை வசதிகளுடன்
மற்றும் சுவையான உணவுவகைகள் இவை
அனைத்துக்கும் நீங்கள் இன்றே நாட
வேண்டிய இடம்
பிள்ளையார் ஹோட்டல் Aதர தங்கும் விடுதி
இல: 31 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
தொ :பே 021 2225595 021 2222829
தொலை நகல்: 021 2225595
மின் அஞ்சல்: Piyarinn @ slt net. lk
(சி.13171)

எமது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
எம்மிடம் கட்டடப் பொருட்கள், எலக்ரிக்கல் ,எலக்ரோனிக் சாதனங்கள்
காஸ் சிலிண்டர்கள், P.V.C பைப்வகைகளை நியாயமான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்
சி. சிவன் ஸ்ரோர்
Shell GAS
கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்
தொ.பே: 021 2225900
(சி.13172)

ஊரெழு பானு பல்பொருள் வாணிபத்தார் சார்பில் ஈழம் தழுவி வாழும்
எம் உறவுகளுக்கும் உலகம் பரந்து வாழும் தமிழ் உறவுகளுக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்.

து.செல்வரெத்தினம்
பானு பல்பொருள் வாணிபம்

ஊரெழு வடக்கு ஸ்ரேசன் றோட் சுன்னாகம்
தொ.பே:0777312391



மோகன் சிவலிங்கம் டோல்ஸ்ராரீஸ் -23
6340 பஜார் சுவிஸ்லாந்து.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

SRIE NAGA BOMBAY DESING
AND
CUTTING CENTRE

I. Suresh

288, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
288, Kasthuriyar Road Jaffna.
0776147358

அனைவருக்கும் எம் இனிய உள்ளம்
மகிழும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

யாழ் மண்ணிலேயே நவீன முறையில்
பொம்பே டிசைன் காப்புக்களை மெசின்
கட்டிங் மூலம் அழகியவண்ண டிசைன்களில்
உடனுக்குடன் செய்து பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

ஸ்ரீ நாகா பொம்பே டிசைன்
அன் கட்டிங் சென்ரர்

இல: 288, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 0776147358



நெல்லியடியில் பாரம்பரியமிக்க ஸ்தாபனமாக விளங்கும்
கலைவாணி கண்ணாடிக்களஞ்சியம் சார்பில்
எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது நிறுவனத்தின் சார்பில் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
நேர்மை நாணயம் நம்பிக்கை... எங்களிடம் வீடுகளுக்குத் தேவையான
அனைத்து வகைப்பொருட்களும் ஒரே இடத்தில்
மலிவாகவும் நியாயமாகவும் கிடைக்கும்

கலைவாணி கண்ணாடிக்
களஞ்சியம்

பிரதான வீதி, நெல்லியடி.

இனிய எம் தமிழ் உறவுகளுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

SATS-TECH ENGINEER'S

டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் ரீவி உபகரணங்கள் விற்பனைக்கு
பிந்திய சேவையுடன் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

உடன் முந்துங்கள்!

106 சனல்கள் பார்க்கக்கூடிய
டிஸ் ரீவி பக்கேஜ்
20000/= மட்டுமே.
மாத வாடகை 1300/=

இல:182,கே.கே.எஸ் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.பே:222 5908, 0777710785

சன் ரீவி, தமிழீழ தேசிய
தொலைக்காட்சி
சனல்கள் அடங்கலாக
39 சனல்கள்
கொண்டவை 12500/=





உங்களை அன்புடன் அழைக்கின்றோம்
ஈழத்தில் வாழும் தமிழ் பேசும் உறவுகளுக்கும்
கடல் கடந்து உலகின் திசைகள்தோறும்
வாழும் எம் தமிழ் உறவுகளுக்கும்
அஜந்தாஸ் ரெக்ஸ் ரைல்ஸ் நிறுவனத்தின் சார்பில்
மனம் நிறைந்த தீபாவளி நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்
நாகரிக உலகில் மக்களின்
நன் மதிப்பைப் பெற்று விளங்கும்
நவநாகரிக ஆடைகளின் உலகம்
அஜந்தாஸ் ரெக்ஸ் ரைல்ஸ்
இல: 54 பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222899
சி.13181




யாழ். மண்ணில் நீண்ட பாரம்பரியம் மிக்க
S.P.N மோட்டோர்ஸ் நிறுவனத்தின் சார்பில் தமிழ்
மக்கள் அனைவருக்கும் இதயம் நிறைந்த தீபாவளி
திருநாள் வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றோம்
LML, HERO HONDA மோட்டார் சைக்கிள் மற்றும் உதிரிப் பாகங்களின்
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
Esp King JP 110, JP 90 சைக்கிள்களை சைனாவில் இருந்து
நேரடியாக இறக்குமதி செய்பவர்கள்
ஜப்பான் super cup C50, C90, MD 90 விற்பனையாளர்
(சி.13182)
S.P.N MOTORS
எஸ்.பீ.என் மோட்டோர்ஸ்
இல: 171 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7144
E-Mail- Nagratnam@hotmil.com




# we wish all our customers and dealers happy Deepavali

## Sudles(pvt) Ltd

## NO:1 J stanley Road,

## Jaffna.

சி.13184



# விளையாட்டு அரங்கு

மரணத்தின் பின்பும் அவன் வாழுகின்றதென்பது அவன் செய்யும் செயற்பாடுகளூடாகவும் அவன் மற்றவர்களுடன் பழகுவதனூடாகவுமே வெளிப்பட்டு நிற்பதை நாம் சொல்லித்தான் புரிய வேண்டிய அவசியமும் இல்லை. அது ஒரு புதிய விடயமும் இல்லை.

அந்த வகையில் அண்மையில் நடைபெற்று முடிந்த லெப்.கேணல்சுட்டா வெற்றிக் கிண்ணம் உறுதிப்படுத்துவதாக இருந்தது.

லெப்.கேணல் நவம் அறிவுக் கூட நிர்வாகப் பொறுப்பாளராகவிருந்து சாவடைந்த லெப். கேணல் சுட்டா அவர்களின் 31ஆம் நாளை அனுஷ்டிக்கும் வகையில் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி மேற்படி அறிவுக்கூடத்தினால் நடாத்தப்பட்டது.

இதில் கிரிக்கெட் போட்டியை தெரிவு செய்து நடாத்தியிருப்பதென்பது லெப். கேணல் சுட்டா கிரிக்கெட் விளையாட்டின் மீது கொண்டிருந்த ஆர்வத்தின் காரணமாக ஆகும்.

இந்த நிலையில் அவரால் பயிற்றுவிக்கப்பட்ட லெப் கேணல் நவம் அறிவுக் கூடக் கல்லூரி அணியும் இப்போட்டித் தொடரில் ஒரு அணியாகப் பங்குபற்றியது.

எட்டு அணிகள் கலந்து கொண்ட இச்சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற நவம் அறிவுக் கூடக் கல்லூரி அணியும், கடற்புலிகள் அணியும், என்ஈசி. அணியும், இளந்தென்றல அணியும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் இளந்தென்றல் அணியும், என்.ஈ.சி.அணி யும் மோதின. இதில் என்.ஈ.சி. அணி இளந்தென்றல் அணியை ஒன்பது விக்கெட்டுகளால் இலகுவாக வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

அடுத்து நடைபெற்ற அரையறுதிப் போட்டியில் கடற்புலிகள் அணியும், நவம் அறிவுக் கூடக் கல்லூரி அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 14 ஓட்டங்களினால் நவம் அறிவுக் கூட அணி



## வழிகாட்டிகளுக்குக் கௌரவம்!

வெற்றிப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. இறுதிப் போட்டியில் என்.ஈ.சி. அணியும் நவம் அறிவுக் கூடக் கல்லூரி அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நவம் அறிவுக் கூட கல்லூரி அணி தர்சனின் அபாரமான அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் அணியை ஒரு பலமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்சன் மிகவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஏழு ஆறு ஓட்டம், இரண்டு நான்கு ஓட்டம் அடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் புலிமகன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு கடினமானதொரு வெற்றியிலக்கு நோக்கி ஆட ஆரம்பித்த என்.ஈ.சி. அணி ஆரம்பம் முதல் எதிரணி ஓட்ட வேகத்திற்கு ஏற்ப ஆடிவந்ததுடன் நவம் அறிவுக் கூடக் கல்லூரி அணியின் பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் விளையாடினார்கள். இதில் திவாகரின் ஆட்டம் சிறப்பான தொன்றாக அமைந்ததுடன் போட்டியை ஒரு பரபரப்பான நிலைக்கும் கொண்டு சென்றார். ஆனால் நவம் அறிவுக் கூடக் கல்லூரி அணியின் பந்து வீச்சாளர் நீதன் சிறப்பான பந்து வீச்சின் மூலம் என்.ஈ.சி. அணியின் வெற்றி கனவு கலைக்கப்பட்டது. இறுதியில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்ற என்.ஈ.சி.அணி 24 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது. இதில் திவாகர் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நீதன் அபாரமாகப் பந்துவீசி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்றிய நவம் அறிவுக் கூடக்கல்லூரி அணியினர் வெறும் வெற்றிக்காக போராடினார்கள் என்று சொல்வதைவிட அவர்கள் மேற்படி கிண்ணத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற தாகத்துடன் விளையாடினார்கள் என்றே கொள்ளவேண்டும்.

சுட்டா நினைவாக அவருக்குப் பிரியமான கிரிக்கெட்டை நடாத்தியதன் மூலமும், அவ்வெற்றிக் கிண்ணத்தை போராடி வெற்றி கொண்டதன் மூலமும் நவம் அறிவுக்கூடத்தினர் ஒருஉண்மையை வெளிக்கொண்டு வந்துள்ளனர். அதாவது சுட்டாவின் இலட்சியத்துடன் ஒன்றியவர்களான நவம் அறிவுக் கூடத்தினர், சுட்டாவின் விருப்பிற்குரியதான விளையாட்டில் வெற்றி பெறுவதை அவருக்கு வழங்கும் கௌரவமாகக் கொண்டிருந்ததே இவ்வெற்றியின் இரகசியமாகும்.

**சுபியன்**

## மீண்டும் ஒளிரும் நட்சத்திரம்

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் 1985 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒரு அனுபவத்தை இந்திய ரசிகர்கள்இன்று அனுபவிக்கின்றார்கள் எனில் அதனை மறுப்பதற்கில்லை. காரணம் அக்காலப் பகுதியில் அதாவது 1983 ஆம் ஆண்டு கபில் தேவ் தலைமையிலான அணி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய



பின்னர் அவ்வணிக்கு பல புதிய முகங்கள் அறிமுகமாகின. அவர்களில் சஞ்சே மஞ்ரேக்கர் சிந்து, மனோஜ் பிரபாகர் ஆகியோரும் அடங்குவர். இவர்களின் வருகை பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அதற்குக் காரணம் சுனில் கவாஸ்கர், சிறிகாந்த் வெங்காசர் போன்ற பிரபல வீரர்கள் ஓய்வுபெற்றமையாகும் எனினும் இவர்களையொத்த வீரர்கள் யாராயினும் அணியில் புதிதாக இடம்பிடிக்கமாட்டார்களா? என ரசிகர்கள் ஏங்கியவேளையிலேயே மும்பாய் நகரம் ஒரு நட்சத்திரத்தை இந்திய கிரிக்கெட்டுக்கு வழங்கியது. அது வேறு யாருமல்ல சச்சின் டெண்டுல்கர் ஆவார்.

டெண்டுல்கர் மிக இளம் வயதிலேயே இந்திய அணியில் சேர்ந்து சர்வதேச போட்டிகளில் பங்கேற்றார். அவரின் வருகையின் பின்னர் இந்திய அணி சற்றுப் பிரபலமடைந்தது என்றால் மிகையாகாது. காரணம் அவர் ஓட்டம் பெறும் வேகமும் துடுப்பாட்ட விவேகமும் ஆகும்.

இவரின் துடுப்பாட்ட நுட்பத்தினால் பல பந்துவீச்சாளர்கள் சச்சினுக்கு பந்து வீசுவதென்றால் அச்சமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். இவரது புகழ்காரணமாகவே பல வியாபார நிறுவனங்கள் பல கோடி ரூபாய்களுக்கு இவரை விளம்பர ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவைத்துள்ளன.

கிரிக்கெட் என்றால் சச்சின், சச்சின் என்றால் கிரிக்கெட் என்று இருந்த வேளையில் அவர் துரதிர்ஷ்டமாக காயங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது முதலில் முதுகுப்பிடிப்பு காரணமாக நீண்ட ஓய்வில் இருந்துமீண்ட சச்சின் அண்மைக்காலமாக முழுங்கையில் ஏற்பட்ட காயத்தினால் சத்திர சிகிச்சைக்குள்ளாகினார். இந்த சிகிச்சைக்கு முன்னர் அவரின் துடுப்பாட்டத்தில் வீழ்ச்சியேற்பட்டமை காயம் காரணமாக இருக்குமா என தற்போது எண்ணத்தோன்றுகிறது.

எனினும் உலகில் வேறு எந்தவொரு வீரரும் இவ்வாறு பாரிய காயங்களுக்குள்ளாகி மீண்டும் வந்து சிறப்பாக ஆடியிருப்பாரோ என்பதைக் கூற முடியாதுள்ளதுபோக சச்சின் டெண்டுல்கர் பாரிய முழங்கை சத்திரசிகிச்சை மற்றும் முதுகுப் பிடிப்பு ஆகியவற்றில் இருந்து தேறிவந்து தனது முன்னைய பாணியில் துடுப்பெடுத்தாடுவது ரசிகர்களுக்கு பெரும் விருந்தாவதுடன் இந்திய அணிக்கு ஒரு திடகாத்திரம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை என்பதுடன் 85 ஆம் ஆண்டு சச்சினின் வருகை எவ்வாறு ரசிகர்களை மகிழ்வித்ததோ அதே மகிழ்ச்சியை சச்சின் தற்போதும் வழங்குகிறார் என்றே கூறலாம்.

**வடிவேல்**

## எதிர்பாராத சறுக்கல்

சிறிலங்கா கிரிக்கெட் அணி தற் போது இந்தியாவில் அந்நாட்டு அணியுடன் ஏழு ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்று வருகின்றது.அதன்படி நேற்றைய போட்டியுடன் நடந்து முடிந்த மூன்று போட்டிகளிலும் அவ்வணி எதிர்பார்க்காதவாறு தோல்வியைச் சந்தித்து பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதுடன் அதன் ரசிகர்களையும் பெரும் ஏமாற்றத்திற்கும் உள்ளாக்கியதும்

சிறிலங்கா கிரிக்கெட் அணியைப் பொறுத்தவரை அது ஒரு நாள் போட்டி தரவரிசையில் உலகில் இரண்டாமிடத்தை வகிக்கின்றது. அத்துடன் அதன் கிரிக்கெட் வரலாற்றை நோக்கும் போது பல சாதனைகளை முறியடித்த வீரர்கள் அன்றும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். அதுமட்டுமன்றி 1996 ஆம் ஆண்டு பலம்மிக்க அவுஸ்திரேலிய அணியை வெற்றிகண்டு உலகக் கிண்ணத்தையும் கைப்பற்றியது.



அதன்பின்னர் நடைபெற்ற போட்டிகளில் ஒன்றிரண்டில் சறுக்கியிருந்தாலும் சராசரியாக அவ்வணி வெற்றிகளைக் குவித்தே வந்தது.

இறுதியாக இவ்வருட நடுப்பகுதியில் இந்நாட்டில் நடைபெற்ற முக்கோணத் தொடரில் இந்தியாவை இறுதிப் போட்டி யில் வீழ்த்தி "இந்தியன் ஒயில்" கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த வெற்றியுடன் பெரும் நம்பிக்கையுடன் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணி ஒருநாள் பயிற்சிப்போட்டி ஒன்றுஉட்பட நான்கு போட்டிகளிலும் பரிதாபமாகத் தோல்வியைச் சந்தித்திருப்பது சிறிலங்காவின் ரசிகர்களுக்கு வேதனையளிப்பதொன்றாகும்.

எவ்வாறாயினும் உலகின் தலைசிறந்த ஒரு நாள் போட்டி அணித்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அத்தப்பத்துவின் தலைமையிலான அணி இனி வரும்போட்டிகளில் தனது தவறுகளையுணர்ந்து செயற்படும் என்பதால் இந்திய அணி இவ்விரு வெற்றிகளிலிருந்து இறுமாந்திருக்க முடியாது. அதன் உண்மையை உணர்ந்தாலேயே இந்திய அணித்தலைவர் ராவிட்டும் சிறிலங்கா அணியுடனான போட்டிகளில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என இரண்டு வெற்றியின் பின்னும் எச்சரித்திருந்தார் உண்மையில் சிறிலங்கா அணியின் துடுப்பாட்ட வரிசையான ஜெயசூரியா, சங்கக்கார மகேல ஆகியோரைச் சாதாரண வீரர்களாகக் கருதிவிட முடியாது. இதற்குக்காரணமாக அண்மையில் அவுஸ்திரேலியாவுடனான உலக அணி பங்குகொண்ட ஒரு நாள் போட்டியில் சங்கக்காரவின் கரமே ஓங்கியிருந்தது. அதேவேளை இந்தியாவுடனான இந்தியன் ஒயில் கிண்ணத் தொடரில் தொடர் நாயகன் விருது பெற்ற மகேல ஜயவர்த்தனவும் சிறப்பான துடுப்பாட்ட வீரர் என்பதை மறுப்பதற்கில்லை.

அடுத்ததாக இந்திய அணியின் சச்சினைப் போன்று ஜெயசூரியவும் சாதனை வீரராவார். அதேபோன்று பந்து வீச்சிலும் முரளிதரன், வாஸ், உப்புல் சந்தன தில்கார பர்னாண்டோ ஆகியோரும் இந்தியன் ஒயில் தொடரின்போது இந்தியாவை புறமுதுகிட வைத்தவர்களாவர்.

எனினும் இத்தகைய அணியின் பலதரப்பட்ட திறன்களும் நடந்து முடிந்த போட்டிகள் முதல் இரண்டுபோட்டியிலும் ஓடி ஒழிந்துவிட்டமைக்கான காரணம் புரியாத புதிராகவே உள்ளதுஎனவே இப்புதிருக்கான விடையை விரைவில் கண்டுவிடும் மனப்பாங்கில் சிறிலங்கா அணியின் அனைத்து வீரர்களும் இருக்கும் நிலையில் இனிவரும் போட்டிகள் பரபரப்பாகவும் திகில் நிறைந்தவையாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# பல்கலைக்கழகம் அமைக்க மலையகத்தில் ஏற்பாடு!

(கொழும்பு)

மலையகத்தில் பல்கலைகழகம் ஒன்றை அமைப்பதற்கான முனைப்புகளை மலையக கல்விமான்கள் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் அண்மையில் தோட்ட உட்கட்டமைப்புதுறை அமைச்சர் டிலான் பெரேராவுக்கும் மலையக கல்விமான்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது..

இதனையடுத்து அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான யோசனையை முன்வைக்க தோட்ட உட்கட்டமைப்புதுறை அமைச்சர் டிலான் பெரேரா உறுதியளித்தார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளமையால் அதில் இந்த விடயத்தை உள்ளடக்குவதற்கும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை இந்த சந்திப்பு குறித்து கருத்துரைக்கும் கொழும்பு பல்கலைகழக பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தாம் மலையக மக்களுக்கு அவர்கள் நாட்டுக்காக மேற்கொண்ட பணிகளுக்கு பரிசாக இந்த பல்கலைக்கழகத்தை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டதாக தெரிவித்தார். (32)

# ஒன்றரைக்கோடி செலவில் "கைவிரல் மை" இறக்குமதி

சனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள கைவிரல் மை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.இதன் பெறுமதி சுமார் ஒன்றரைக் கோடி ரூபாவாகும். ஏற்கனவே தேர்தல்களில் பயன்படுத்தப்பட்ட மை வகைகளை காட்டிலும் இது உயர்தரத்தை சார்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.இது தற்சமயம் அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.இதேவேளை தேர்தல் கண்காணிப்புகளில் ஈடுபடவுள்ள வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குவது குறித்து இன்று சந்திப்பு ஒன்றை தேர்தல் ஆணையகம் ஏற்பாடு செய்துள்ளது.


## ஈகைத் தென்றல் பந்தல் சேவை

இல:-63 D10 — உருத்திரபுரம்


உரிமையாளர்:- சுந்தரலிங்கம்-ஈஸ்வரன்

திருமண வைபவம், பூப்புனித நீராட்டுவிழா, அனைத்து மங்கல நிகழ்வுகளுக்கும், அமங்கல நிகழ்வுகளுக்கும் எமை நாடுங்கள். (சி.13193)


## I ஆம் ஆண்டு நினைவலைகள்...

"படைத்ததை மீளப்பெறும் இறைவன் நினைவுகளை மீளப்பெறுவதில்லை"

பிறப்பு 1951 - 11 - 29



இறப்பு 2004 - 11 - 12

## நாகலிங்கம் — இராசலிங்கம்

அப்பா, பாரில் நீங்கள் எமை
பதறித் துடிக்க விட்டு
பறந்து சென்று ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நாமுள்ளவரை எங்கள்
இதயங்களில் வீற்றிருந்து
எமக்கு நல்வழிகாட்டும்
அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

சொ.மு. 7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
த.மு:-தச்சடம்பன், மாங்குளம்.

மனைவி பிள்ளைகள்,

(6424)

## 60 ஆவது பிறந்தநாள்+ 41 ஆவது மணநாள் வாழ்த்துக்கள் (01.11.2005)



தும்பிக்கையான் துணையுடனும் சிவதிருவருளுடனும் தமிழீழ விடுதலைப் புலி வீரரின் பாதுகாப்புடனும் வள்ளுவர் வகுத்த வழியில் வாழ்வாங்கு வாழ்ந்து வரும் திருமதி விஜயலட்சுமி (தேவி) அவர்களை சகல சௌபாக்கியங்களுடனும் நீடூழி வாழ்ந்து பெற்றோர், உற்றோர் உறவினர்கட்கும், பிறந்த பொன் தமிழர் தம் நாட்டிற்கும் பெருமைதேடித்தர வேண்டி பிரார்த்தித்து அன்புடன் வாழ்த்துவோர்.

இல்லத்து இணைவன்:-சிவசுப்பிரமணியம்.
பிள்ளைச் செல்வங்கள்:-ரகுணா, சுகுணா, நளினா, அமரர் மாவீரர் தேவினா (கப்டன் எழினி).
மருமக்கட் செல்வங்கள்:-புவிதரன், இந்திரன், கேசவமூர்த்தி.
பேரப்பிள்ளைச் செல்வங்கள்:-ரகுலன், கிரிசாந்தி, நாகினி (எழினி), விதுலன், கிரிகரன் (கண்ணன்),கிரிமாறன்.
பிறந்த மண்:- சின்மயபவனம்", அளவையூர் வடக்கு அளவெட்டி
புகுந்தமண்:- தேவி பவனம், யாழ்சாலை, காங்கேசன்துறை,
புகலிடம் தந்த ஆறாவது மண்:- "தேவினா இல்லம்" 5 ஆம் வட்டாரம், இரணைப்பாலை,
மு/புதுக்குடியிருப்பு.

(சி.6636)


## இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

யாழ். ரெக் கணினிக் கல்வியகத்தின் ஆரம்பத்தினை முன்னிட்டு வழங்கப்படவிருக்கும் மாபெரும்

### "கணினிசார் தொழிற்கல்வி புலமைப்பரிசில் திட்டம் 2006"

இதற்கான விசேட கற்கைநெறிகள் விஜயதசமி முதல் ஆண்டிறுதி வரை பல பிரிவுகளில் நடைபெறவிருக்கின்றது

நவீன கணினி தொழில்நுட்பம் மற்றும் கல்வி முறைக்கமைய பொதுவான கணினி சார்ந்த அலுவலர்களுக்கும் சிறந்த நிறுவனங்களில் தொழில்புரிவதற்கான அல்லது சுயதொழில் கற்கை நெறிகளாக எட்டு கற்கைநெறிகளை உள்ளடக்கிய கல்வியாண்டு 2006"இற்கான மாபெரும் கணினிசார் தொழிற்கல்வி புலமைப்பரிசில் திட்டம்" கொழும்பு லண்டன் இன்ஃபோரெக்இன் இணை நிறுவனமான யாழ் ரெக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினூடாக யாழ். கணினி துறைசார்ந்த மாணவர்கள் பெரும் பயனடையவிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| MS.OFFICE எம்.எஸ்.ஓபிஸ் | MULTIMEDIA மல்ரிமீடியா | TYPESETING ரைப்செற்றிங் | PHOTO MIXING போட்டோ மிக்ஸிங் |
| VIDEO MIXING வீடியோ மிக்ஸிங் | WEB DESIGN வெப்டிசைனிங் | COMPUTERIZED ACCOUNTING கணினிவழி கணக்கியல் | HARDWARE ENGINEERING காட்வெயார் இஞ்ஜினியறிங் |

- கற்கைநெறி கட்டணமாக ரூபா 1500/= மட்டுமே அறவிடப்படும்
- முதலில் இணையும் 100 பேர்களுக்கு பதிவுக்கட்டணம் இல்லை.
- அனைத்து கற்கைநெறிகளும் டிப்ளோமா நிலைக்குட்பட்டதாகும்
- கற்கைநெறி முடிவில் கல்வியாண்டு 2006 இற்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டு புலமைப்பரிசில்வழங்கப்படும்.
- கற்கைநெறிகளிலுள்ள பாடவிதானங்களுக்கமைவான செயற்திட்டப் பரீட்சை மற்றும் பொதுஅறிவு, நுண்ணறிவு பரீட்சைகள் நடாத்தப்படும்.
- பெறுபேறுகளுக்கமைய 50%-70% வரையான கட்டணச்சலுகை மற்றும் ரூபா .500/= பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் அதேவேளை உச்ச சலுகைகள் பலவுள்ளன.
- இவ்வருட A/L O/L மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மற்றும்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் கற்கைநெறி கட்டணத்திலிருந்து 100% கழிவு வழங்கப்படும்.
- அனைத்துத் தரப்பினருக்கும் அமைவாக நேர அட்டவணை தயாரிக்கப்பட் டுள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் (விழாவினூடாக விசேட அதிகாரிகளினால்) வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம்:
10 ஒக்ரோபர் முதல் 25 டிசெம்பர் வரை

YTS

## யாழ்-ரெக்

இல.3,சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி
(யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)(சி.13157)

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

21.10.2005ஆம் திகதி ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்திற்கமைய, எனது அடையாள அட்டைகளைக் கண்டெடுத்தவர்கள், அருகில் உள்ள காவல்பணிமனையிலோ, றெட்பானா சந்தியில் உள்ள பலசரக்கு கடையிலோ, அல்லது மு/பாரதிவித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள பலசரக்கு கடையிலோ தயவு செய்து ஒப்படைக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் சி.மகாலிங்கம், வள்ளுவர்புரம், விசுவமடு. (6900)

## காணி விற்பனைக்குண்டு

பாரதிபுரம் தமிழீழ நிர்வாகசேவை, நடுவப் பணியகம் முன்பாக அமைந்துள்ள கால்ஏக்கர் விஸ்த்தீரணமுடைய ஆதனம் விற்பனைக் குண்டு. தொடர்புக்கு வே.செல்வா, சட்டவாளர் மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி தொ.இல:- 021-2285795 (6902)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி சார்ந்த

Hardware Technology

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகட்கு.

வின்நெற் கணனி பயிற்சி நிலையம்

டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி-13074)

## சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

இயந்திரத்தில் செய்த சீமெந்துக்கல் சிவா பொறியியற் தொழிலகம் 4ஆம் கட்டை அம்பாள் புரம் வன்னிவிளாங்குளத்தில் ((மாங்குளம்) விற்பனைக்குண்டு.

அளவுகளும் விலையும்

5"x6" x12"=ரூ25.00, 4"x6" 'x14"=ரூ23.00

(6841)

# விசேட மருத்துவமுகாமும் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளும்

தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்கு படுத்தலில் மருத்துவர்கள்,மருத்துவ நிபுணர்கள் இணைந்து கிளி சாந்தபுரம் பாடசாலையில் நாளை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரையும் உயர்குருதியமுக்கம், சலரோகம் (நீரிழிவு)வாய்ப்புற்றுநோய் ஆகியவற்றுக்கான மருத்துவ சிகிச்சையும் ஆலோசனைகளும், மழைக்காலத்து தொற்று நோய்கள் தொடர்பான சுகாதார விழிப்புணர்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே தொடர்ச்சியான தலையிடி, நெஞ்சுநோ, களைப்பு போன்ற உயர்குருதியமுக்கத்திற்கான அறிகுறிகளும், அடிக்கடி சலம் போதல்,தலைச்சுற்றல், தண்ணீர்த்தாகம், தலையிடி ஆகிய சலரோகத்திற்கான (நீரிழிவு) அறிகுறிகளும் வாயில் தொடர்ச்சியான புண்கள், வாயெரிவு, வாய்க்குழியினுள் வழமையைவிட நிறமாற்றம், வாய்க்குழி மென்சவ்வு வழமைக்கு மாறாக காணப்படல் ஆகிய வாய்ப்புற்று நோய் ஆரம்ப அறிகுறிகளுடன் கூடியவர்களும் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இச் செயற்பாடுகளுடன் மழைக்கால தொற்று நோய் வருமுன் பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களும், வாய்ச்சுகாதாரம் தொடர்பான வீடியோ காட்சிகளும் பற்சிகிச்சையும் மேற்கொள்ளப்படுமென சுகாதார சேகைள் பொறுப்பாளர் அறியத்தருகிறார்.


# ஓயாத அலைகள் 3 இன் 6 ஆம் ஆண்டு நிறைவு

# வெற்றிவிழா

எதிர்வரும் 02.11.2005 அன்று காலை 10. மணிக்கு ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. இவ் வெற்றி விழா நிகழ்வில் துணுக்காய் பிரதேசத்தின் வாழ் மக்கள் அனைவரையும் உணர்வு எழுச்சியுடன் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் மிகவும் அன்புடன் அழைக்கின்றனர்.



*மல்லாவி பிரதேச வர்த்தக சங்கத்தினர்.* (சி-13195)


# 5ஆம் ஆண்டு நினைவு நாள்

ஜனனம் 02 - 09 - 1969



வீரச்சாவு 01 - 11 - 2005

**தமிழீழ காவல்துறை பரிசோதகர்**

***செல்வம் யோகராசா***

**(முகமாலை பளை)**

**ஆண்டுகள் ஐந்து சென்றாலும்**
**ஆறிடுமோ உன்நினைவு**
**ஆறாத நினைவுடனே**

சிதம்பரம் குடியிருப்பு.
மந்துவில் புதுக்குடியிருப்பு. (6901)

உன்பிரிவால் துயருறும்
**தாய்,குடும்பத்தினர்.**

# மாவட்டச் செயலக பொதுத் தொலைபேசி சேவை

*மேற்படி யாழ். மாவட்டச் செயலகத்தில் 08.09.2005 ஆம் திகதி தொடக்கம் பொதுத் தொலைபேசி இலக்கம் 021 222 2233, 021 222 2234 மூலம் சகல பதவிநிலை அலுவலர்களுடனும் கிளைகளுடனும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*எனவே, மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை உள்ளோர் பின்வரும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய தேவையை/ சேவையை தகவல்களை நிறைவேற்றிக்கொள்ள இயலும்.*

*மேலேயுள்ள பொதுத்தொலைபேசி இணைப்பு முறையுடன் பின்வரும் நேரடித் தொலைபேசி இலக்கங்கள் மூலமும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.*

| | | |
|---|---|---|
| 01. பொது அலுவலகம் | மாவட்டச் செயலகம் | 021 222 2233<br>021 222 2234 |
| 02. அரசாங்க அதிபர் | அலுவலகம்<br>வதிவிடம்<br>தொலைநகல் | 021 222 2235<br>021 222 2205<br>021 222 2355 |
| 03. மே. அரசாங்க அதிபர் | அலுவலகம்<br>வதிவிடம் | 021 222 2236<br>021 222 4158 |
| 04. மே.மா செயலர் (நிதி) | அலுவலகம்<br>வதிவிடம்<br>தொலைநகல் | 021 222 2398<br>021 222 3301<br>021 222 2398 |
| 05. நிர்வாக உத்தியோகத்தர் | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 2775<br>021 222 2775 |
| 06. உ.அ.அ. (த.பி) | அலுவலகம் | 021 222 2771 |
| 07. திட்டப்பணிப்பாளர் | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 2774<br>021 222 2774 |
| 08. கணக்காளர் (மா.பு.பு.கிளை) | அலுவலகம் | 021 222 2648 |
| 09. பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் | அலுவலகம் | 021 222 2427 |
| 10. சுனாமி தகவல் நிலையம் | அலுவலகம் | 021 222 7921 |
| 11. சமுர்த்தி உ.ஆ | அலுவலகம் | 021 222 6421 |
| 12. உ.மா.பதிவாளர் | அலுவலகம் | 021 222 2475 |
| 13. ஆட்பதிவுத்திணைக்களம் | அலுவலகம் | 021 222 5052 |
| 14. மாவட்ட புள்ளி விபரவியலாளர் | அலுவலகம் | 021 222 3330 |
| 15. மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 3789<br>021 222 8271 |
| 16. மோட்டார் வாகனப் பரிசோதகர் | அலுவலகம் | 021 222 7552 |
| 17. பி.திட்டப்பணிப்பாளர் வட – கிழக்கு வீடமைப்பு புனரமைப்புத் திட்டம் (NEHRP) | அலுவலகம் | 021 222 8028 |
| 18. பி.திட்டப் பணிப்பாளர் வட – கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (NEIAP) | அலுவலகம் | 021 222 5068 |
| 19. நிகொட் (NECORD) | அலுவலகம்<br>தொலைநகல் | 021 222 5163<br>021 222 3625 |
| 20. மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு | அலுவலகம் | 021 222 3886 |
| 21. உதவி ஆணையாளர் தேர்தல் | அலுவலகம் | 021 222 2655 |
| 22. பொறியியல் ஆலோசகர் | அலுவலகம் | 021 222 7583 |
| 23. கணக்காய்வு அத்தியட்சகர் | அலுவலகம் | 021 222 5949 |
| 24. UNHCR-Office | அலுவலகம் | 021 222 5593 |
| 25. உதவி மாவட்டச் செயலர் (மனிதவள அபிவிருத்தி) | அலுவலகம் | 021 222 6725 |
| 26. மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகம் (வட – கிழ மாகாணம்) | அலுவலகம் | 021 222 2475 |
| 27. இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு | அலுவலகம் | 021 222 3625 |
| 28. NORAD | அலுவலகம் | 021 222 5752 |
| 29. மத்திய சுற்றாடல் அதிகாரசபை | அலுவலகம் | 021 222 5693 |
| 30. NECCDEP | அலுவலகம் | 021 222 7900 |

**க.கணேஷ்**
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலரும்
யாழ்ப்பாணம். (சி-13194)

மூன்றாவது ஒரு நாள் போட்டி

# இந்திய அணி மகத்தான வெற்றி டோனியின் அற்புத ஆட்டம்!






இந்திய-சிறிலங்கா அணிகளுக்கிடையில் நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் டொனியின் அற்புதமான ஆட்டத்தினால் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் மகத்தான வெற்றியை பெற்றுக் கொண்டது.


இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சிறிலங்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி ஜெயசூரியவும் சங்கக்காரவும் களமிறங்கினர். அவர்களிருவரும் இந்திய பந்து வீச்சை விளாசி ஓட்ட வீதத்தை அதிகரித்தனர். எனினும் அணியின் ஓட்ட எண்ணிக்கை 31 ஆக இருந்தபோது ஜெயசூரிய அகக்கரின் பந்து வீச்சில் 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் அத்தப்பத்து யாதேவின் பந்து வீச்சில் தோனியிடம் பிடிகொடுத்து 17 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 77 ஆக இருந்தது. அதனையடுத்து மகேல ஜயவர்த்தன களமிறங்கி சங்கக்காரவுடன் 151 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப்பெற உதவினார். எனினும் அவர் 71 ஓட்டங்களில் அகக்கரின் பந்தில் ஆட்டமிழந்தார். எனினும் கடைசியிணைப்பாட்டமாக 58 ஓட்டங்கள் மக்ரூப், சங்கக்கார ஆகியோரால் பெறப்பட்டது. இந்நிலையில் 50 ஓவர் முடிவில் சிறிலங்கா 298 ஓட்டங்களைப் பெற்று இந்தியாவுக்கு பெரும் இலக்கு ஒன்றை நிர்ணயித்தனர். சங்கக்கார ஆட்டமிழக்காது 138 ஓட்டங்களைப்பெற்றார்.

பந்துவீச்சில் அகக்கர் இரண்டு, யாதேவ், சேவாக் இருவரும் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

பதிலுக்கு 299 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கி ஆடிய இந்திய அணி ஏழு ஓட்டத்தைப் பெற்ற வேளையில் சச்சினின் விக்கெட்டையிழந்தது. அவர் வாஸின் பந்தில் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் சேவாக், மகேந்திரசிங் டோனி இணை 92 ஓட்டங்களையிணைப்பாட்டமாகப் பெற்றனர். எனினும் முரளியின் பந்தில் சேவாக் எல் பி முறையில் ஆட்டமிழக்க இந்தியா 99 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டையிழந்தது.

அடுத்து டோனி அற்புதமாக ஆடி ஓட்டங்ளைக் குவிக்க மொத்த ஓட்ட எண்ணிகை 185 ஆக இருக்கையில் ராவிட் ஆட்டமிழந்தார். அவரது சொந்த ஓட்ட எண்ணிக்கை 28 ஆகும். அடுத்து இணைந்த யுவராஜ்சிங் 18 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து டோனியுடன் வேணுகோபால் ராவ் இணைந்தார். இறுதிவரை சிறிலங்கா அணியின் பந்து வீச்சை விளாசிய டோனி ஆட்டமிழக்காது பத்து ஆறு ஓட்டங்கள் 15 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 183 ஓட்டங்களைப் பெற்று இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்தார். வேணு கோபால்ராவ் 19 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டநாயகன் விருதைப் பெற்ற டோனி இதுவரை இந்திய கிரிக்கெட் அணியில் விக்கெட் காப்பாளர் ஒருவர் பெறாத ஓட்ட எண்ணிக்கையை டோனி பெற்றமை குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களையும் வாஸ், தில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பெற்றனர். நான்காவது ஆட்டம் நாளை மறுதினம் புனேயில் நடைபெறும்.

## வீரர்கள் அஞ்சலி



டில்லியில் சனிக்கிழமை நான்கு இடங்களில் வெடிகுண்டுகள் வெடித்து பலர் உயிரிழந்தார்கள். அவர்களுடைய மரணத்துக்கு இரு அணி வீரர்களும் அனுதாபம் தெரிவிப்பதாக நேற்று ஜெய்ப்பூரில் இந்திய அணித்தலைவர் ராவிட் பேட்டி அளிக்கும் போது தெரிவித்தார்.




# டெண்டுல்கர் விசுவரூபம் எடுத்தால் பந்து வீச்சாளர்கள் என்ன செய்ய முடியும்?




டெண்டுல்கர் விசுவரூபம் எடுத்து ஆட ஆரம்பிக்கும் போது எங்களுடைய பந்து வீச்சாளர்கள் என்ன செய்ய முடியும் என்று சிறிலங்கா அணித்தலைவர் அத்தப்பத்து சோகத்துடன் கூறினார்.

சிறிலங்கா அணித் தலைவர் அத்தப்பத்து நேற்று ஜெய்ப்பூர் மைதானத்தில் நிருபர்களிடம் கூறியதாவது.

டெண்டுல்கர் பொதுவாக தலைசிறந்த துடுப்பாட்ட வீரர். அதிலும் இப்போது அவர் நல்ல நிலைக்குத் திரும்பி இருக்கிறார். இந்த நேரத்தில் அவரை எங்களுடைய பந்துவீச்சாளர்களால் என்ன செய்துவிட முடியும்? எனவே எங்களுடைய பந்துவீச்சாளர்களை நான் குற்றம்சொல்லமாட்டேன். அவர்களைக் குறை சொல்வது நியாயமும் அல்ல. உலகின் தலைசிறந்த ஐந்து பந்து வீச்சாளர்கள் பட்டியலில் முரளிதரன், வாஸ் ஆகியோர் வருகிறார்கள். டெண்டுல்கர் போன்ற தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்துவீச்சாளர்களால் அழுத்தம் கொடுத்து ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே அப்படி எந்தத் திட்டமும் என்னிடம்இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# இந்திய அணியின் நலனுக்காக டெண்டுல்கர் பாதுகாக்கப்பட வேண்டும்

## இந்திய அணி பயிற்றுவிப்பாளர் சப்பல்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் காயம் காரணமாக ஆறு மாதம் விளையாடாமல் இருந்த அவர் தற்போது சிறிலங்காவிற்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் விளையாடி வருகிறார்.

நாக்பூரில் நடந்த முதல் போட்டியில் 93 ஓட்டங்களும், மொகாலியில் நடந்த இரண்டாவது போட்டியில் 67 ஓட்டங்களும் எடுத்து இந்திய அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்தார். இது தொடர்பாக அணியின் பயிற்சியாளர் சப்பல் கூறியதாவது.

டெண்டுல்கர் சவாலை சந்தோசத்துடன் ஏற்றுக்கொண்டு திறம்பட விளையாடுபவர். அவரது போக்கிலேயே அவர் விளையாட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். நீண்ட இடைவேளைக்குப் பிறகு அவர் அணிக்குத் திரும்பி இருக்கிறார்.

அதனால் அதிகப்படியான சுமையை ஏற்றி அவருக்கு பதற்றத்தை கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. இந்திய அணியின் நலனுக்காக டெண்டுல்கரை பத்திரமாக பாதுகாக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

அன [illegible] பல்வேறு சோதனை முயற்சிகளை நான் செய்து வருகிறேன். அணியைத் தரம் மிக்கது [illegible] உயர்த்த இத்தகைய சோதனை முயற்சிகளும் தொடரும் அனைத்து முயற்சிகளும் அணிக்[illegible]லே செய்யப்படும். தனிப்பட்ட நலனுக்காக எந்த வித பரிசோதனையும் செய்யப்படமாட்டாது. இதன்படி சில வீரர்களிடம் அணியின் நலனுக்காக அவர்களது விளையாட்டு முறையை மாற்றி அமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர்களும் அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். ஒவ்வொரு வாய்ப்பையும் நாங்கள் பயன்படுத்துவோம். அது ஒரு போட்டியாக இருந்தாலும் சரி அல்லது பத்து போட்டியாக இருந்தாலும் சரி என அவர் கூறியுள்ளார்.

டெண்டுல்கரை அணியின் தலைவர் ராவிட்டும் புகழ்ந்தார். அவர் அணிக்காக விளையாடுபவர். அவரது சேவை அணிக்குத் தேவை. சூழ் நிலைக்கு ஏற்ப ஆட்டத்தை மாற்றும் திறன் படைத்தவர் டெண்டுல்கர் என்று அவர் குறிப்பிட்டார்.

# ஒரு நாள் போட்டித் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியது!

## 3ஆவது போட்டியிலும் நியூசிலாந்து தோல்வி



தென்னாபிரிக்கா-நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் போட் எலிசபெத்தில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளதையடுத்து ஐந்து போட்டிகள் கொண்ட தொடரை மூன்றுக்குப் பூச்சியம் என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

மேற்படி போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பில் இறங்கியது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி தென்னாபிரிக்க களத்தடுப்பு, பந்துவீச்சுத்திறன் காரண மாக நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களையிழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணியின் ஸ்டைரிஸ் அதிகபட்சமாக 78 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து பிளமிங் 54 ஓட்டங்களையும் அடம்ஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்காவின் என்ரினி 37 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் அன்ருநெல் இரண்டு விக்கெட்டுக்களையும் லோங்க்வெல்ட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். மூவர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.

அடுத்து 244 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா 49.2 ஓவரில் ஆறுவிக்கெட்டுக்களையிழந்து 245 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அவ்வணியின் கிப்ஸ் 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழி வகுத்தார். கெம்ப் 30ஓட்டங்களும் வில்லியர்ஸ் 29 ஓட்டங்களும் பிரின்ஸ் பொலக் ஆகியோர் தலா 21 ஓட்டங்களும் பெற்றனர்.

பந்து வீச்சில் மக்லம் இரு விக்கெட்டுக்களையும் மார்ஷல், மில்ஸ் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இருவீரர்கள் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.



# ரோஜர் பெடரர் காயம்



டெனிஸ்வீரர் ரோஜர் பெடரர் காலில் பலத்த காயமடைந்துள்ளார். இதனால் எந்தப் போட்டியிலும் விளையாட முடியாமல் போய்விட்டது. ஆனாலும் தீவிரமான சிகிச்சைகளை மேற்கொண்டார்.

இதன் காரணமாக இப்போது பெடரர் ஓரளவு குணமடைந்து வருகிறார். இதை நேற்று அவரே ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியோடு தெரிவித்தார். சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள பாசெல் நகரில் நடந்த டெ்னிஸ் போட்டி ஒன்றை காண்பதற்கு பெடரர் நேற்று வந்திருந்தார்.

காலை சற்று நொண்டி நொண்டி நடந்தார். இப்போது ரசிகர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் மத்தியில் பெடரர் பேசும்போது " ஒரு வழியாக என்னுடைய காலில் ஏ[illegible]டயம் இப்போது தேறி வருகிறது. இன்னும் ஒரு வாரத்தில் நன்கு குணமடைந்துவிடுவேன்" என்று தெரிவித்தார்.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள சங்காய் ஓபன் டெனினிஸ் போட்டியில் ரோஜர் பெடரர் கலந்துகொள்ள இருக்கிறார். அது போல மாஸ்டர்ஸ்கோப்பை போட்டியிலும் பங்கேற்கத் திட்டமிட்டிருக்கிறார்.



### சிந்தனைக்கு

இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# கெடுகுடி சொற்கேளாது!

சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களை வடக்கு– கிழக்கில் அனுமதிக்கக் கூடாது என்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பரிந்துரையினை சிறிலங்கா சனாதிபதி ஆணைக்குழு ஏற்றுக்கொண்டிருப்பதாக வெளியாகியுள்ள தகவல் வரவேற்கத்தக்கதொன்றாயினும் அதன் பயன் என்ன? என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும்.

மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவிடமே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது பரிந்துரையினை தெரிவித்துள்ளது. ஆனால், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவோ அன்றி விடுதலைப்புலிகள் இயக்கமோ இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளை முதற்தடவையாக இவ் ஆணைக்குழு முன்னிலையில்தான் வைத்தனர் என்பதல்ல.

லெப்.கேணல் கௌசல்யனின் படுகொலைக்கு முன்பும் பின்பும் இத்தகைய கோரிக்கைகளைச் சிறிலங்கா அரசிடம் இவை முன்வைத்தே வந்துள்ளன. ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இத்தகைய கோரிக்கைக்குச் செவிசாய்ப்பதாக இல்லை. மறைமுகப் போர் நடத்துவதிலேயே அது அக்கறை காட்டிவந்தது.

அதற்கும் அப்பால் அத்தகைய ஆயுதக்குழுக்கள் எவையும் இல்லை எனவும் சாதிக்கவும் முனைந்தது.குறிப்பாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள், இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனக் கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைத்தபோதும் சிறிலங்கா அரசாங்கம் அதற்குச் செவிசாய்க்கவில்லை. சிறிலங்கா இராணுவத்தரப்பும், அரசாங்கத்தரப்பும் மாறி மாறி அத்தகையதொரு ஆயுதக்குழுவினர் இல்லை என்றே சாதிக்க முனைந்தனர்.

இந்நிலையில்தான் கௌசல்யன் போன்றோரின் படுகொலைகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முன் தமிழ்மக்களும் விடுதலைப்புலிகளும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. அதாவது இவ் ஆணைக்குழுக்கள் வெறும் கண்துடைப்பிற்கானவை என்ற ரீதியிலேயே இவற்றைப் புறக்கணித்தார்கள்.

இவ்ஆணைக்குழுவே தற்பொழுது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், இவ் ஆணைக்குழு இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டதினால் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் தான் களையப்படுமா? புலிகளுக்கு எதிரான மறைமுகப் போர்தான் நிறுத்தப்படுமா?


ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை சிறிலங்கா அரசு யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்த தொடங்கிய உடனேயே களைந்திருத்தல் அவசியமானதாகும். ஏனெனில் போர்நிறுத்த உடன்பாட்டில் இது ஒரு முக்கிய சரத்தாகும். அதுதான் இல்லாது போனாலும் ஆயுதக்குழுக்களின் செயற்பாட்டால் யுத்த நிறுத்த உடன்பாடு கேள்விக்குள்ளாவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள போதே களைந்திருத்தல் வேண்டும், ஆனால் அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

இந்நிலையில், கௌசல்யன் படுகொலை தொடர்பில் விசாரணை ஆணைக்குழுவின் சிபார்சினை ஏற்று அரசாங்கம் ஆயுதக் களைவினை மேற்கொள்ளும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஏனெனில் ஆணைக்குழு விசாரணை மூலம் கண்டறிந்ததும், போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் சிபார்சும் புதியதொன்றல்ல. ஏற்கனவே கோரப்பட்டவையும், சுட்டிக்காட்டப்பட்டவையுமே ஆகும்.

இது ஒருபுறம் இருக்க– சிறிலங்கா அரசு ஆணைக்குழுவை நியமித்ததென்பதுகொலையாளிகள் யார்? காரணம் என்ன? என்பதைக் கண்டறிவதற்காகவா? அவ்வாறு எதுவும் இல்லை. ஏனெனில் அவையாவும் அரசாங்கத்திற்குத் தெரிந்ததொன்றே. இவ் விசாரணைக்குழு நியமனம் என்பது கண்துடைப்பிற்கானதொன்றே தவிர வேறு காரணம் எதுவுமில்லை.

ஆகையினால் விசாரணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும், குற்றவாளிகள் தண்டனைக்கு உட்படுத்தப் படுவார்கள், இனிமேலும் கொலைகள் நடக்காமல் தடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்ப்பதெல்லாம் அர்த்தமற்றவையாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில், பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலைகள் போன்றவற்றில் சனாதிபதி ஆணைக்குழுக்களின் நிபந்தனைகள் சனாதிபதியால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருப்பார்கள். சிறிலங்கா சனாதிபதி ஆணைக்குழுக்கள் விசாரணைகளை நடத்தலாம், சிபார்சுகளை முன்வைக்கலாம். ஆனால் அவை அமுல்படுத்தப்படும் போதே அவை அர்த்தம் உடையவையாகின்றன. ஆனால், இனப்படு கொலைகள் தொடர்பான எந்த ஆணைக்குழுவின் சிபார்சுகளையும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தப் போவதில்லை. அவற்றை எதிர்பார்த்து அவற்றின் நீதி கிடைக்கும் என யாராவது எண்ணுவார்களேயானால் அவர்களுக்கு மிஞ்சக் கூடியது ஏமாற்றம் மட்டுமே.



# பௌத்த சாசனத்தை அவமதிக்கும் வகையில் மங்கள சமரவீர பேசிவருகிறார்

– உடுவே தம்மாலோக்க தேரர் போர்க்கொடி –

சிறிலங்கா அமைச்சர் மங்கள சமரவீரவின் அவதூறுகளைக் கண்டித்து போராட்டம் நடத்துவதற்காக பௌத்த பிக்குகளை ஒன்று திரட்ட உடுவே தம்மாலோக்கதேரர் முடிவு செய்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் பேசிய தம்மாலோக்க தேரர், தம்மீதான மங்கள சமரவீரவின் அவதூறுகள் பிக்குகளையும் பௌத்த சாசனத்தையும் அவமதிக்கும் வகையில் உள்ளதாகக் கூறினார்.

தமக்கு அமைச்சுப் பதவி வழங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு மறுத்ததாகவும் அமைச்சுப் பொறுப்பை அளிக்க ரணில் விக்கிரமசிங்க ஒப்புக் கொண்டதனால்தான் அவரை ஆதரிப்பதாகவும் சில ஊடகங்கள் பொய்ச்செய்திகள் வெளியிட்டு வருகின்றன. ஆனால் இது போன்ற எந்த ஒரு நிபந்தனையும் ரணிலுக்கும் எமக்குமிடையிலான ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை என்றும் தம்மாலோக்க தேரர் கூறினார்.

ஜாதிக ஹெல உறுமயவினரின் மதமாற்றத் தடைச்சட்டத்தை எதிர்ப்பதாகவும் இந்தச் சட்டத்தை அனைத்து மதத்தலைவர்களினதும் ஒப்புதலுடன்தான் நிறைவேற்ற வேண்டுமென்றும் தம்மாலோக்க தேரர் மேலும் கூறினார்.

# புலனாய்வுத்துறை அதிகாரியின் கொலைக்கு ஜே.வி.பி யே பொறுப்பேற்க வேண்டும்

– எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க

சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரி ரிஸ்வி மீடினின் கொலைக்கு ஜே.வி.பி. தான் பொறுப்பேற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை:-

புலனாய்வுத்துறை அதிகாரி ரிஸ்வி மீடின் கொலை செய்யப்பட்டுள்ளார். மீடினின் படு கொலையை நாம் கண்டிக்கின்றோம். அவர் ஒரு திறமையான அதிகாரி. லெப் கேணல் மூத்தலிப் மற்றும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் ஆகியோர் கொலை செய்யப்பட்ட போது அந்தக் கொலை எவ்வாறு நிகழ்ந்தது? அதற்குக் காரணமாக இருந்த பாதுகாப்புக் குறைபாடுகள் என்ன என்பதைக் கண்டறிவதற்காக குழுவை நியமிக்குமாறு அரசாங்கத்திற்கு நாம் வேண்டு கோள் விடுத்தோம். அன்று அந்தக் குழுவை நியமித்திருந்தால் இன்று மீடினிற்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

ஆனால் அந்தக்குழுவை நாம் நியமிக்குமாறு கோரிக்கை விடுத்த போது ஜே. வி.பியின் சோமவன்ச அமரசிங்கவும், விமல் வீரவன்சவும் நாம் விடுதலைப்புலிகள் மீது சுண்ணாம்பு பூச முயல்வதாகக்கூறி அந்தக் குழு நியமிக்கப்படுவதை தடுத்துவிட்டனர். அதனால் மீடினின் கொலைக்கும் அதற்கு காரணமாக இருந்த பாதுகாப்புக் குறைபாடுகளுக்குமான பொறுப்பினை ஜே.வி.பியினரே ஏற்க வேண்டும்.

இத்தகைய கொலைகள் நிகழ்கையில் அவை விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டவை எனக் குற்றம் சாட்டி அதனைக் கண்டிப்பது மட்டும் போதுமானதல்ல. தனது பாதுகாவலர்கள் இன்றி நண்பர்களுடன் கிரிபத் கொடைவிலுள்ள உணவகம் ஒன்றிற்கு சென்று திரும்புகையிலேயே மீடின் கொல்லப்பட்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது. அன்று அந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்குமானால் இத்தகைய பாதுகாப்பற்ற பயணங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை பாதுகாக்கப்பட வேண்டுமா அல்லது அதனை இரத்துச் செய்ய வேண்டுமா என்பது பற்றி மகிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவில்லை. இதுபோன்ற கொலைகளை நிறுத்துவது எப்படி என்றும் அவர் இதுவரை எதனையும் அறிவிக்க வில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யவோ திருத்தவோ தேவையில்லை. செய்ய வேண்டியது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை பலப்படுத்துவதுதான். கிழக்கிலிருக்கும் பொலிசாருக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் விசேட பயிற்சிகளை வழங்கி அந்த அமைப்புக்களைப் பலப்படுத்த வேண்டும். கொலைகளை மேற்கொள்ளும் குழுக்கள் பற்றி ஆராய்வதற்காக புதிய பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சனாதிபதி சந்திரிகாவிடம் கோரியிருந்தோம். இவற்றை நிறைவேற்றுவதாக சந்திரிகாவும் தெரிவித்தார்.

புலனாய்வுப்பிரிவினர், முக்கிய பிரமுகர்கள், கிழக்கில் விடுதலைப்புலிகள், கருணா குழுவினர் ஆகியோர் கொலை செய்யப்படும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நாம் சில திட்டங்களை முன் வைக்கவுள்ளோம் என்றார் ரணில் விக்கிரமசிங்க.

# சுனாமி நிவாரணப் பொருட்களை தீயிட்டு அழிக்கும் அரசாங்கம்

– ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

சுனாமி நிவாரணப் பொருட்களை, சிறிலங்கா அரசாங்கம் தீயிட்டு அழிப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.


ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது.

சர்வதேச சமூகத்தினரால் வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற சுனாமி நிவாரணப் பொருட்களை சிறிலங்கா அரசாங்கம் விநியோகிக்கவில்லை. கடந்த 10 மாதங்களாக அரசாங்க கிடங்குகளில் இவை முடங்கியுள்ளன.

விநியோகிக்கப்படாத பொருட்களை தீயிட்டு அழிக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைந்தால் இது தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

அம்பலாந்தோட்டை, மொனறாகலை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் சுனாமி நிவாரணப் பொருட்கள் வைத்திருக்கும் கிடங்குகளில் அடிக்கடி அண்மைக் காலமாக தீ விபத்துக்கள் நடைபெறுகின்றன. பாவனைக்குரிய நாட்கள் கடந்துவிட்ட நிலையில் மருந்துப் பொருட்களை அழித்து வருவதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர். நிவாரணப் பொருட்கள் தொடர்பில் முறையாக கோப்புக்களை அரசாங்க அதிகாரிகள் கையாள்வதில்லை என அவர் கூறியுள்ளார்.














இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.